வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 21.08.2021 சனிக்கிழமை | இதழ் : 260 | பக்கங்கள் : 16




# நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல ஒரு குழுவாக பணியாற்ற வாருங்கள்!

## மக்களுக்கான உரையில் ஜனாதிபதி அழைப்பு

- இது வேலைநிறுத்தம், போராட்டத்துக்கான காலமல்ல!
- முடக்கத்தால் பொருளாதாரம் முழுமையாக சரியும்
- 30 இலட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன
- வருடம் 400 கோடி டொலர் கடன் செலுத்தும் நிலை



கொழும்பு, ஓக. 21

“இனிவரும் நாட்களில், இந் நாட்டை நீண்ட காலத்துக்கு மூடி வைக்க வேண்டிய நிலைமை ஏற்படுமாயின், நாட்டிலுள்ள அனைவரும், மிகவும் அர்ப் பணிப்புடன் செயலாற்ற வேண் டும். இவ்வாறான முக்கியமான தருணத்தில், நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினரும், இந்தத் தீர்மானமிக்க நிலைமையைப் புரிந்து

15

# நேற்றிரவு முதல் ஊரடங்கு அமுல்!

## விவசாயம், மருந்து, விநியோகம், ஆடைத்தொழில், அத்தியவாசிய சேவை முடங்காது



கொழும்பு, ஓகஸ்ட் 21

நேற்றிரவு 10 மணி முதல் நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்த ஊரடங்கு சட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி அதி காலை 4 மணி வரை நடைமுறையில் இருக்கும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறி வித்துள்ளார்.

15

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஊரடங்கு காலத்தில் தடுப்பூசி

## செப்ரெம்பர் 1 இற்கு முன் பூர்த்தி செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவு

கொழும்பு, ஓக. 21

நாடு முழுவதும் தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நேற்று இரவு 10.00 மணி முதல் 30 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணி வரை, அமுல்படுத்த, தீர்மானித் துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இதுவரையில் தடுப் பூசி ஏற்றப்படாத 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதை இலக்கா கக் கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், செப் ரெம்பர் 01ஆம் திகதிக்கு முன்னர், அவர்கள் அனைவருக்கும் தடுப் பூசியை வழங்கி முடிக்குமாறு, பணிப்புரை விடுத்தார்.

பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் கிராமிய கொவிட் ஒழிப்புக் குழுக்கள் மூலம் இந்த நபர்களை அடை யாளம் கண்டு தடுப்பூசி ஏற்ற, 23 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் சுகாதாரப் பிரிவுக்கு அறிக்கை அளிக்கப்பட வேண் டும். மேலும், 1906 என்ற அவசர இலக்கத்துக்கு அல்லது தேசிய கோவிட் ஒழிப்பு மையத்துடன் தொடர்புகொண்டு பதிவு செய்யும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

15

# மூன்று வகையான திரிபுகளுடன் கொழும்பில் ஒருவர் அடையாளம்

கொழும்பு, ஓக. 21

நாட்டில் தற்போது பரவி வரும் டெல்டா திரிபினுடைய மேலும் மூன்று திரிபுகளுடன் கொழும்பில் ஒருவர் அடையா ளம் காணப்பட்டுள்ளார்.

உலகில் டெல்டா வின், மூன்று திரிபுகளு

15

# மேலும் 3,835 பேருக்கு நேற்று கொரோனா!

கொழும்பு, ஓக. 21

கொரோனா தொற்று உறுதி யான மேலும் 3,835 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ள னர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரி வித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட வர்களின் மொத்த எண் ணிக்கை 381,812 ஆக

15

# மேலும் 195 பேர் பலி!

கொழும்பு, ஓக. 21

நாட்டில் நேற்று முன்தினம் 195 கொவிட் மரணங்கள் பதி வாகியுள்ளன. ஒரே நாளில் பதி வான அதிக மரண எண்ணிக்கை இதுதான் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகத்தின் உறுதிப் படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள

15

# வடக்கில் 114 தொற்றாளர்: யாழ்ப்பாணத்தில் 64 பேர்!

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்ப்பாணத்தில் 64 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 114 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத் தில் 687 பேரின் மாதிரி கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

15

# பொருட்கள் கொள்வனவு செய்ய இரவிரவாக மக்கள் முண்டியடிப்பு!

கொழும்பு, ஓக. 21

நேற்றிரவு முதல் நாடுமுழு வதும் ஊரடங்கு சட்டம் அமு லுக்கு வந்த நிலையில் மக்கள் முண்டியடித்து பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டனர்.

வர்த்தக நிலையங்கள், சிறப்பு அங்காடிகளில் மக்கள் அதிள வில் கூடி பொருட்கள் கொள் வனவில் ஈடுபட்டமையை அவதானிக்க முடிந்தது.

நாடு முழுவதும் நேற்

15

## இப்படியும் நடக்கிறது...!

அது ஒரு விடியற்காலை 3 மணி. மழை வேறு பெய்து கொண்டிருந்தது. ஒரு வீட்டில் கணவன், மனைவி தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது கதவு தட்டும் சத்தம் கேட்டது.

கணவன் மட்டும் எழுந்து போனான். கதவை திறந்தால் அங்கே ஒரு குடிகாரர் நின்று கொண்டிருந்தார்.

“சேர் ஒரு உதவி... கொஞ்சம் அங்க வந்து தள்ளி விட முடியுமா?” என்று அந்த குடிகாரர் கேட்டார்.

கணவனோ “என்னடாப்பா நேர காலம் தெரியாதா? விடியக்காலை 3 மணிக்கு தொந்தரவு செய்யிறியே” என்று சொல்லிவிட்டு கதவை சாத்திக்கொண்டு தூங்கப் போய் விட்டான்.

“யாரது?” என்று மனைவி கேட்டாள்.

“எவனோ ஒரு குடிகாரன், வந்து காரோ எதையோ தள்ளி விட முடியுமா எண்டு கேக்கிறான்” என்றான் அவன்.

“நீங்க உதவி செஞ்சீங்களா?” என்று கேட்டாள் மனைவி.

“இல்லை, விடிய 3 மணி, மழை வேற பெய்யுது எவன் போவான்?” என்றான் அவன்.

“கொஞ்ச நாள் முன்னாடி நம்ம கார் றோட்டில நிக்கேக்க இரண்டு பேர் நமக்கு உதவி செஞ்சாங்களே? இப்ப நீங்க அது மாதிரி உதவி செய்யலன்னா எப்படி? கடவுள் குடிகாரர்களையும் நேசிப்பார்” என்றாள் மனைவி.

கணவன் எழுந்து உடையை மாற்றிக்கொண்டு, மழையில் நனைந்தவாறே வெளியே போனான்.

இருட்டு, மழையில் சரியா தெரியாதால சத்தமா கேட்டான்.

“ஹலோ, நீங்க இன்னும் இருக்கிறீங்களா?” என்று கேட்டான்.

“ஆமாம்” என்று பதில் வந்தது.

“ஏதோ தள்ளி விடனும்னு சொன்னீங்களே, இப்ப செய்யலாமா?”

“ஆமா சேர், வந்து கொஞ்சம் தள்ளிவிட்டீங்கன்னா நல்லா இருக்கும்”

“எங்கே இருக்கீங்க”

“இங்கதான் ஊஞ்சல் மேல உட்கார்ந்திருக்கேன் வாங்க வந்து தள்ளிவிடுங்க.”

நாடு கொரோனா நெருக்கடியில் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருக்கின்றது.

குறைந்தது இரண்டு வாரங்களுக்காவது நாட்டை முழுமையாக முடக்கினால்தான் சுருண்டு சுருண்டு விழுந்து மரணிக்கும் மக்களின் இழப்பை ஓரளவுக்காவது குறைக்கலாம் என்ற குரல்கள்தான் எங்கும் ஒலித்துக்கொண்டிருந்தன.

இரண்டு அல்ல மூன்று வாரங்களுக்கு முழு அடைப்பு செய்தாலும் இழப்பைத் தடுக்க முடியாது. ஏனெனில், தொற்று சமூகம் முழுவதும் பரவிவிட்டது என்று சில நிபுணர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

அரசில் இடம்பெற்றுள்ள பங்காளிக்கட்சிகள்கூட முடக்கத்தை கோரிக்கொண்டிருக்கின்றன. இப்படி நாடு எங்கும் கொரோனா நெருக்கடி மற்றும் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்று அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருக்க, சம்பந்தன் ஐயாவின் செய்தி ஒன்றின் தலைப்பு இப்படி இருந்தது.

‘காலதாமதம் வேண்டாம்.’ ஜனாதிபதிக்கு சம்பந்தன் அவசர கடிதம்!

இந்தத் தலைப்பை பார்த்ததும் ஐயா இப்போதுதான் விழித்திருக்கிறார்போல, அவரும் தனது பங்குக்கு நாட்டை முடக்கக் கேட்டுவிட்டார் என்று நினைத்துக் கொண்டு செய்தியைப் படித்தால், அவர் வேறு விஷயம் பேசுகிறார்.

“புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் நீண்ட காலம் கடத்தப்பட்டுள்ள நிலையில் இனியும் கால தாமதங்களை ஏற்படுத்த வேண்டாம். விரைவில் புதிய அரசமைப்பு உருவாக்க விடயங்களை முன்னெடுக்க வேண்டும்” என்று சம்பந்தன் ஐயா ஜனாதிபதியிடம் கோரியிருக்கிறார்.

செய்தியைப் பாத்ததும், ஒரு கூட்டமைப்பு தலைவருக்கு அழைப்பெடுத்து, “ஐயா எங்கே வேறேதாவது நாட்டில் இருக்கிறாரா?”, என்று கேட்டேன்.

அவர் சொன்னார், “இல்லை இல்லை இங்கேதான் இருக்கிறார். ஆனால், வீட்டுக்கு வெளியே என்ன நடக்கிறது என்பது சாம் அண்ணனுக்கு தெரிந்திருக்காது தானே. அவருக்கு நாட்டு நடப்புக்களை சொல்லி புரிய வைப்பது இப்போது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது...’!

மேலே உள்ள ஊஞ்சல் கதைதான் ஞாபகத்திற்கு வந்தது.!

**- ஊர்க்குருவி**

# பேருந்து, தொடருந்து சேவைகள் 30ஆம் திகதி வரை இடம்பெறாது

கொழும்பு, ஓக. 21

நேற்று இரவு 10.00 மணி முதல் நாடு தழுவிய பொது முடக்கம் நடைமுறைக்கு வந்தது. இதனால், எதிர்வரும் 30ஆம் திகதி வரை பேருந்து, தொடருந்து சேவைகள் இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனை தெரிவித்தார்.

அத்துடன், அத்தியாவசிய சேவைகளுக்கு பயணிப்பவர்களுக்காக நிறுவனங்களின் உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்தால் மாத்திரம் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தை வழங்க தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார். (ஐ)

## கொரோனாவால் தாதி உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 21

சுகாதாரத் துறை ஊழியர்களில் பெரும் எண்ணிக்கையானோருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இவர்களில் 7 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார ஊழியர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெற்றுவந்த தாதி ஒருவர் நேற்று உயிரிழந்தார். அசோகா மல்காந்தி என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மூன்று பிள்ளைகளின் தாயான அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார். ரந்தவான - விழிம்புல பகுதியைச் சேர்ந்த அவருக்கு 48 வயது. (ஐ)

## சமுர்த்தி வங்கி செயல்பாடு முடக்கம்

வவுனியா, ஓக. 21

வவுனியா வேப்பங்குளம் சமுர்த்தி வங்கியில் பணியாற்றிய ஊழியர்கள்இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து வங்கியில் செயல்பாடுகள் அனைத்தும் நேற்றுமுன்தினம் முதல் முடக்கப்பட்டுள்ளதுடன் மறு அறிவித்தல் வரை வங்கி முடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேப்பங்குளம் சமுர்த்தி வங்கியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கடந்த இரு தினங்களாக அன்ரிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது .

இதன்போது வெளிக்கள உத்தியோகத்தர் மற்றும் வங்கியில் பணியாற்றும் ஊழியர் உட்பட இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## ஜனாதிபதிக்கு...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய வரலாற்றுப் பின்னணிகளோடு, இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் சகல அரசியல் ரீதியான வரலாற்று நிகழ்வுகளுக்கும் முகம் கொடுத்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தமது பரந்த அனுபங்களின் அடிப்படையில் புதிய அரசியலமைப்பொன்றின் தேவையை வலியு றுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

புதிய அரசியலமைப்பொன்று உருவாகும் பட்சத்தில் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கான நிரந்தர தீர்வுகளை எட்டுவதற்கு தற்போதைய அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தில் பல தரப்பட்ட அம்சங்கள் ஏற்புடையனவாக இருக்கின்றன. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தனின் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய வகையில் பரிசீலிக்கும் பட்சத்தில் ஆரோக்கியமான முடிவுகளை எட்ட முடியுமென்றே கருதலாம்.

கல்வி tv CHANNEL-1

**21.08.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**21.08.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
21.08.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தலிபான்களுடன் உறவு வேண்டாம்!

ஆப்கானிஸ்தான் மீண்டும் தலிபான்களின் அதிகாரத்தின்கீழ் வந்ததைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானில் இயங்கிய மேற்குலக நாடுகளின் தூதரகங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கின்றன. அனைத்து இராஜதந்திரிகளும் நாட்டைவிட்டு வெளியேறியிருக்கின்றனர். சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் தூதரகங்கள் மட்டுமே தொடர்ந்தும் இயங்கிவருகின்றன. இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் 2001-2014 வரையில் ஆட்சியிலிருந்த முன்னாள் ஜனாதிபதியுடன் இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசியில் பேசினாரென செய்தியொன்று வெளியாகியிருந்தது. குறித்த முன்னாள் ஜனாதிபதி, தலிபான்களின் இடைக்கால அரசாங்கத்தில் இணைந்துகொள்வது தொடர்பான பேச்சுகளில் ஈடுபட்டுவருகிறாரெனவும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலிபான்களுடன் தொடர்புகளை பேணிக்கொள்ளவேண்டாம் என்றும், அது இலங்கையில் மீண்டும் பயங்கரவாதத்திற்கு உயிர் கொடுக்கும் செயல்பாடாக அமையுமென்றும் தெரிவித்திருக்கின்றார்.

தலிபான் அமைப்பு, மேற்குலக நாடுகளில் பயங்கரவாத அமைப்பாக பட்டியல்படுத்தப்பட்டிருக்கும் ஓர் அமைப்பாகும். அவர்கள் ஆப்கானிஸ்தானை ஆட்சிசெய்த காலம் மிகவும் மோசமானது. கடும்போக்குவாத இஸ்லாமிய குழுவான தலிபான்கள், இஸ்லாமிய ஷரியா சட்டத்தின்கீழ்தான் நாடு நிர்வகிக்கப்படவேண்டும் என்னும் நிலைப்பாட்டை கொண்டவர்கள். மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்கு முற்றிலும் எதிராக செயல்பட்டிருந்தனர். பெண் பிள்ளைகள் பாடசாலைகளுக்கு போவதற்கு தடைவிதித்திருந்தனர். அதனை மீறி சென்றவர்களை துன்புறுத்தினர். பலர் சுடப்பட்டிருக்கின்றனர்.

2001இல் அமெரிக்க படையினர் ஆப்கானிஸ்தான்மீது தாக்குதலை தொடுத்து, தலிபான்களை வெளியேற்றிய பின்னர், கடந்த 20 வருடங்களாக பாகிஸ்தானின் ஆதரவுடன் மறைமுகமாக இயங்கிவந்தனர். இந்த நிலையில், அமெரிக்க படைகள் ஆப்கானிலிருந்து வெளியேறியதை தொடர்ந்து, தற்போது ஆப்கானிஸ்தான் மீண்டும் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வந்திருக்கின்றது.

தலிபான்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வந்திருப்பது தெற்காசிய பாதுகாப்பு நிலைமைகளை கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றன எனக் கணிக்கப்படுகின்றது. ஆப்கானிஸ்தான் தலிபான்கள் வசமிருந்த காலத்தில், அல்-ஹைடா மற்றும் பல்வேறு சர்வதேச இஸ்லாமிய ஜிகாதி அமைப்புக்களின் கூடாரமாகவே இருந்தது. ஆப்கான் மீண்டும் தலிபான்களின் வசமாகியிருப்பதால், மீண்டும் ஆப்கான் நிலம் இஸ்லாமிய பயங்கரவாதிகளுக்கான புகலிடமாக மாறுவதற்கான வாய்ப்பிருப்பதாக பலரும் அச்சம் வெளியிட்டுவருகின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில், தலிபான்களின் ஆப்கான் அரசுடன் எந்த நாடுகள் தொடர்பில் இருக்கப்போகின்றன என்பதை பொறுத்திருந்துதான் நோக்கவேண்டும். ஆனால், பாகிஸ்தான், சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தலிபான்களின் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்பு தென்படுகின்றது. ஒரு சிறந்த இஸ்லாமிய அரசாங்கத்தை தாம் விரும்புவதாக சீனா ஏற்கனவே அறிவித்திருக்கின்றது.

இவ்வாறான விடயங்களை கருத்தில்கொண்டுதான், ரணில் விக்கிரமசிங்க தலிபான்களுடன் தொடர்பு கொள்ளவேண்டாமென்று அரசாங்கத்தை எச்சரித்திருக்கின்றார். ஆனால், தலிபான் அரசாங்கம் தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் உத்தியோகபூர்வமான நிலைப்பாடுகள் எதனையும் வெளியிடவில்லை.

# ஜனாதிபதிக்கு சம்பந்தனின் கடிதம்!

**-அலசுவது இராஜதந்திரி-**

உலகில் இன்று அரசியல், பொருளாதார பிரச்னைகளால் சிக்குண்டுள்ள நாடுகளுக்கு அப்பிரச்னைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு உலகை அச்சுறுத்திவரும் கோவிட்-19 வியாதி ஒரு நல்லகாரணியாக இருக்கின்றது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. கடந்த இரு வருடங்களாக இலங்கையை கோவிட்-19 வியாதி ஆட்டிப் படைத்து வருகின்றது. பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல ஓர் உறுதிப்பாடற்ற பொருளாதார நிலையைக்கொண்டிருந்த இலங்கையை கோவிட்-19 வெகுவாகப் பாதித்துள்ளது.

சாதாரண மக்கள் உண்ணுகின்ற பாண் போன்ற உணவுப் பண்டங்களும் விலையேற்றத்தை கண்டுள்ளன. இதுதவிர, எரிபொருள் விலையும் அதிகரிக்கும் சாத்தியங்கள் பலமாக இருக்கின்றன. இதனால் சமையல் எரிவாயு போன்றவைகூட விலையேறியதைக் காண முடியும்.

ஆகவே, இவ்வாறான ஓர் அசாதாரண சூழ்நிலையில் எவ்வித முன்னேற்பாடோ அல்லது திட்டமிடலோ இன்றி அரசாங்கம் காணப்படுகின்றது. இதனால் கோவிட்-19 பிரச்னைக்கு மத்தியில் தீர்வுகாணப்பட வேண்டிய அரசியல் பிரச்னைகளும் அரசாங்கத்தினால் தட்டிக்கழிக்கப்பட்டு வருவதையே அவதானிக்கமுடிகிறது.

இன்று பாராளுமன்றத்தில் இருக்கின்ற அதிசிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தன் புதிய அரசியலமைப்பின் மூலம் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்க்கவேண்டுமெனவும் இது விடயத்தில் காலதாமதத்திற்கு இடமளிக்கக்கூடாதென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் அனுப்பிவைத்துள்ளார்.

இந்தக் கடிதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்திசெய்வது தொடர்பான எதிர்பார்ப்பிலிருந்து விலகிவிடவில்லை என்பதையே எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்வது விடயத்தில் நம்பி ஏமாந்ததே வரலாறாக இருக்கின்றது. இந்த ஒப்பந்தங்கள் தீர்வுத்திட்டங்கள் என்றெல்லாம் கொண்டுவரப்படும்போது அவை தோல்வியைத் தழுவியதே வரலாறாக இருக்கின்றது.

**புலிகளின் நிராகரிப்பு**

ஆரோக்கியமான ஒப்பந்தங்கள் தென்னிலங்கையில் ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாக கிழித்தெறியப்பட்டதையும் மறுபுறத்தில் தீவிரவாத போக்கில் நம்பிக்கை வைத்து 13ஆவது திருத்தச்சட்டம் போன்ற ஆக்கபூர்வமான தீர்வுத்திட்டத்தை வடக்கு - கிழக்கின் ஆயுதப் போராட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நிராகரித்ததுமே வரலாறாக இருக்கின்றது.

எவ்வாறாயினும் 13ஆவது திருத்தச் சட்டமே இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை



தீர்க்கவல்லது என்பதை இலங்கையில் மட்டுமல்ல. இந்தியாவிலும் அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதியும் இன்றைய பிரதம மந்திரியுமான மஹிந்த ராஜபக்ஷ முன்பு பல தடவைகள் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பாலும் சென்று ஒரு தீர்வை தம்மால் வழங்க முடியுமென்று குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை வெறுமனே இலங்கையின் அரசியல் அமைப்பில்சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆவணமாக மாத்திரம் கருதிவிட முடியாது.

**தாரக மந்திரம்**


இலங்கையின் அரசியல் அமைப்பில் வடக்கு - கிழக்கு பிரச்னையை தீர்க்கவல்ல ஒரு தாரக மந்திரமாகவே 13ஆவது திருத்தச் சட்டம் விளங்குகின்றது. இலங்கையின் மூத்த சிங்கள, தமிழ் அரசியல்வாதிகளால் மட்டுமல்ல. இந்தியாவின் 'புடம் போட்ட' அரசியல்வாதிகள், இராஜதந்திரிகளின் கலந்துரையாடல்கள் மற்றும் ஆலோசனைகள் என்பவையும் உள்ளடக்கப்பட்டு ஒரு சமஷ்டி ஆட்சியமைப்புக்கு நிகரான முறையில் 13ஆவது திருத்தச்சட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

அன்று இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவின் அரசியல் ரீதியான ஆதரவோடு மட்டுமல்ல. இந்தியாவின் இராணுவ ரீதியான பின்புலத்துடன் ஒன்றிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்கள் என்ற அடிப்படையில் 13ஆவது திருத்தச்சட்டத்தின் உள்ளடக்கங்கள் ஒரு விரிவான அதிகாரப் பரவலாக்கங்களுக்கும் இடமளித்திருக்க முடியும். ஆனால், 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கம் என்பது "குளத்தைக் கலக்கி பருந்துக்கு இரை" கொடுத்த கதையாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்குவதை தடுத்து நிறுத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் மிக மோசமான தவறுகளைப் புரிந்து வடக்கு - கிழக்கு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வந்த இந்திய அமைதிப் படையினரையும் விட்டியடித்ததோடு, இந்திய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய அந்நாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியையும் கொலை செய்திருந்தனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். தாமதமான வேலைகள் இன்று முடியும். நிம்மதி அதிகரிக்கும். பயம் நீங்கும். புதியவர்கள் நண்பர்களாகி நன்மை செய்வர்.

**இடபம்**
நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். மனதிற்கு பிடித்தவர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பீர்கள். ஓய்வெடுக்க முடியாத படி பணிச்சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. தவறுகளை சுட்டிக் காட்டி சச்சரவுகளில் சிக்க வேண்டாம். பணியாளர்கள் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**கடகம்**
இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்படுவதால் பிரச்னை இல்லை. சில விஷயங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வீண் அலைச்சல், செலவுகள் வருவதற்கு வாய்ப்புள்ளது

**சிம்மம்**
கலைத்துறையினருக்கு இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். பெற்றோரின் ஆதரவு கூடும்.

**கன்னி**
சகபணியாளர்கள் உங்களை பாராட்டுவர் நன்மை நடக்கும் நாள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள், நண்பர்கள் உங்கள் உதவியை நாடி வருவர்.

**துலாம்**
புதிய நண்பர்கள் உங்களைத் தேடி வருவார்கள். கலகலப்பான நாள். முயற்சியால் முன்னேறுவீர்கள். சிரமம் இருந்தாலும் திருப்தியான நாள். நண்பர் மூலம் ஒரு திடீர் நன்மை கிடைக்கும்.

**விருட்சிகம்**
பணப்புழக்கம் மாற்றமின்றி எப்போதும்போல் இருக்கும். உங்களின் திட்டம் ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமை ஏற்படும்.

**தனுசு**
செல்வம் சேரும். பொறுமையுடன் எதையும் செய்ய வேண்டும். யாருடைய தூண்டுதலாலும் தவறு செய்ய வேண்டாம். பேச்சில் கவனம் தேவை. நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**மகரம்**
வியாபாரிகள் புதிய இனங்களில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். போராடி வெல்வீர்கள். சக ஊழியரிடம் விவாதம் செய்யவேண்டாம். பிறரின் உணர்வை புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்படுவீர்கள்.

**கும்பம்**
கடுமையான உழைப்பால் அனைவரையும் வியக்க மிகுந்த முயற்சி காரணமாக கூடுதல் நன்மைகள் கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உங்களின் மதிப்பு உயரும்.

**மீனம்**
எடுத்த செயல்களில் இருந்து வந்த சுணக்கம் தீரும் நிறையச் செலவானாலும் அவை சந்தோஷம் அளிக்கும். உங்களின் திறமைகளுக்கேற்ப கூடுதல் பொறுப்பு வரும்.

# மேகதாது அணை கட்ட அனுமதிக்ககூடாது கர்நாடக முதல்வரின் பேச்சு சட்டவிரோதம்

## ஒசூர் ஆர்ப்பாட்ட பேரணியில் பிரேமலதா சீற்றம்

*ஒசூர், ஒக. 21,*

“மேகதாதுவில் கர்நாடகா அணைக்கட்டக்கூடாது. கர்நாடக முதலமைச்சரின் பேச்சு சட்டவிரோதமானது. அணை கட்டுவதை நிறுத்த வேண்டும். நாம் இனத்தால் இரத்தத்தால், மூச்சுக்காற்றால் ஒன்றுதான். நீரால் மட்டும் ஏன் பிரிவினை?” எனக் கேள்வி எழுப்பியுள்ளார் தே.மு.தி.கவின் பொருளாளர் பிரேமலதாவிஜயகாந்த்.



கர்நாடகாவில் மேகதாது அணை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒசூரில் தே.மு.தி.க. நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு, மேகதாது அணை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அதை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும், தமிழக-கர்நாடக எல்லையான ஒசூரின் ராம்நகரில் தேமுதிக பொருளாளர் பிரேமலதா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காக, ஒசூர் வந்த பிரேமலதா, பேரணியாக ஒசூர் ராம்நகருக்கு வந்தார். அங்கு பிரேமலதா பேசுகையில், “மத்தியில் பா.ஜ.க., கர்நாடகாவிலும பா.ஜ.க. அரசு ஆளுகிறது. கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை மேகதாதுவில் அணைக்கட்டுவோம் என்று பேசுகிறார். தமிழகத்தின் சார்பில் எச்சரிக்கிறோம், மாநில எல்லைக்கு வந்தவர்கள் கர்நாடகத்திற்கு வர முடியாதா? நாம் ஒருதாய் பிள்ளைகள். நமக்குள் எந்த பிரிவினையும் வேண்டாம்.

தமிழக முதலமைச்சர், பிரதமர் ஆகியோர் இரு மாநிலங்களுக்கு இடையே பிரச்சனைகள் உருவாகமல் தடுக்க வேண்டும். அதற்காக கர்நாடகா மேகதாதுவில் அணைக்கட்டக் கூடாது. கர்நாடக முதலமைச்சரின் பேச்சு சட்டவிரோதமானது. அணைக்கட்டுவதை நிறுத்த வேண்டும். தமிழக மக்கள் இழிச்சவாயர்கள் அல்ல. வஞ்சிக்க வேண்டாம். நாம் இனத்தால் இரத்தத்தால், மூச்சுக்காற்றால் ஒன்று தான். நீரால் மட்டும் ஏன் பிரிவினை?” என அவர் தெரிவித்தார்.

# கீழடி அகழாய்வில் தொன்மையான ‘சுடுமண் முத்திரை’ கண்டெடுப்பு!

*சென்னை, ஒக. 21,*

தமிழகத்தில் கீழடி அருகே நடைபெறும் அகரம் அகழாய்வில் தொன்மையான சுடுமண் முத்திரை கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சிவகங்கை மாவட்டம் கீழடி அருகே உள்ள அகரம் கிராமத்தில் தொல்லியல் துறை சார்பில் அகழ்வாராய்ச்சி பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் தொன்மையான சுடுமண் முத்திரை என்ற பொருள் கிடைத்துள்ளது.

இதுகுறித்து தொல்லியல்துறை அதிகாரிகள் கூறியதாவது:-

சுடுமண்ணால் ஆன முத்திரை 256 செ.மீ. ஆழத்தில் அகழாய்வு குழியில் இருந்து வெளிக்கொணரப்பட்டு உள்ளது. இந்த முத்திரையானது கனமாகவும், தலைப்பகுதி மற்றும் அடிப்பகுதி தட்டையாகவும், உடல்பகுதியானது உட்குழிவுள்ள உருளை வடிவத்தினையும் கொண்டுள்ளது.

முத்திரையின் தலைப்பகுதியில் கீறப்பட்ட 3 பிரிவுகளை கொண்ட தடிமனான வட்ட வடிவ அலங்காரங்கள் உள்ளன. இந்த வடிவத்தின் நடுவே புள்ளிகள் காணப்படுகின்றன. கைப்பிடி



பகுதியின் பக்கவாட்டிலும், முத்திரையின் தலைப் பகுதியிலும் சிறிது சேதம் அடைந்துள்ளது. இம்முத்திரையின் மேற்புறம் நன்கு வழுவழுப்பாகவும், அடிபகுதி சற்று சொரசொரப்பாகவும் உள்ளது. மிகநேர்த்தியாக கையால் வனையப்பட்டுள்ள இம்முத்திரையானது 2.75 செ.மீ. உயரமும், முத்திரையின் தலைப்பகுதியின் விட்டம் 2.80 செ.மீ. ஆகவும் உள்ளது. இம்முத்திரையின் எடை 24.6 கிராம் ஆகும்” என அவர்கள் கூறினார்.

# கொடநாடு கொலை வழக்கின் தகவல்கள் பத்திரிகையாளர்களால்தான் வெளிவந்தது

## பழிவாங்கும் நோக்கம் இல்லை என்கிறார் கனிமொழி

*சென்னை, ஒக. 21,*

“யார் மீதும் பழிவாங்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் தி.மு.கவுக்கு இல்லை. ஒரு பெரிய கொலை வழக்கு, அதில் உள்ள சிக்கல்கள் பத்திரிகையாளர்களால் வெளியே கொண்டு வரப்பட்டுள்ளன. அரசு அதனைக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது” என்று கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.

விளாத்திக்குளத்தில் கனிமொழி செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

“தேர்தல் வாக்குறுதிகளை யார் நிறைவேற்றாமல் இருந்தனர் என்பது அனைவருக்கும் தெரியும். 10 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்து மக்களைத் தொடர்ந்து ஏமாற்றியதால் தான், மக்கள் இன்று அவர்களுக்குச் சரியான பாடத்தைக் கற்றுக்கொடுத்துள்ளனர்.



எந்தத் தேர்தல் வாக்குறுதியையும் அவர்கள் நிறைவேற்றியதே கிடையாது.

கொடநாடு விவகாரம், அவர்களது ஆட்சிக் காலத்திலேயே வெளியே வந்தது. அப்போது ஒரு பத்திரிகையாளர்தான் அங்கு நடந்த உண்மைகளை வெளியே கொண்டுவந்தார். எனவே, யார் மீதும் பழிவாங்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் தி.மு.கவுக்கு இல்லை. ஒரு பெரிய கொலை வழக்கு, அதில் உள்ள சிக்கல்கள் பத்திரிகையாளர்களால் வெளியே கொண்டு வரப்பட்டுள்ளன. அரசு அதனைக் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு வாய்ப்பே கிடையாது. யாராக இருந்தாலும் நியாயம் கிடைக்க வேண்டும். அதுதான் அரசின் கடமை. அவர்களுக்கு மடியில் கனம் இருந்தால் பயம் இருக்கலாம்.

சட்டப்பேரவையில் இவர்களது ஆட்சிக் காலத்தில் பேசுவதற்கு யாருக்கு வாய்ப்பிருந்திருக்கிறது. இதற்கு முன்னால் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் ஜனநாயகம் என்பது கடைப்பிடிக்கப்பட்டது. தற்போது தி.மு.க. ஆட்சியில் எதிர்க் கட்சிகளுக்கும் பேச வாய்ப்பளிக்கப்படுகிறது. அவர்களால் பேச முடியாமல் வெளியே செல்கிறார்கள் என்றால் யாரும் ஒன்றும் செய்ய முடியாது” என கனிமொழி தெரிவித்தார்.

# வடக்கு மாகாணத்தில் 82.15 வீதம் பேர் குறைந்தது ஒரு தடுப்பூசி பெற்றனர்!

யாழ்ப்பாணம், ஒக. 21

வட மாகாணத்தில் 30 வய துக்கு மேற்பட்ட வயதினர் 657,447 பேரில் நேற்று முன் தினம் வரை மொத்தம் 540,158 பேர் குறைந்தது ஒரு கோவிட் 19 தடுப்பூசியைப் பெற்றுள்ளதாக வட மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், 175,485 பேர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளதாக அவர் வெளி யிட்டுள்ள புள்ளிவிவர அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதன்படி வடக்கில் குறைந் தது ஒரு தடுப்பூசி பெற்றவர்க ளின் தொகை 82.15 வீதமாக வும் இரண்டு தடுப்பூசிகள் பெற் றவர்களின் தொகை 26.69 வீத மாகவும் பதிவாகியுள்ளது.



# தொண்டைமனாறு கடற்பரப்பில் 168 கிலோ கஞ்சா நேற்று மீட்பு

## படகுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஒக. 21

கடல் மார்க்கமாக சட்ட விரோதமான முறையில் கஞ்சா போதைப்பொருள் கடத்தி வரப் பட்டபோது வடமராட்சி - தொண்டைமனாறு கடற்பரப் பில் வைத்து மூவர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இதன்போது 168 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள் ளதுடன், கடத்தலுக்கு பயன் படுத்தப்பட்ட படகுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செம்பியன்பற்று பகுதியைச் சேர்ந்த ஒருவர் மற்றும் மன் னார் சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த இருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2-3)

# கல்மடு கிராமம் முடக்கம்!

வவுனியா, ஒக. 21

வவுனியா புளியங்குளம் கல் மடு கிராமத்தில் மேற்கொள்ளப் பட்ட அன்ரிஜென் பரிசோதனை யில் 13 பேர் கொரோனா தொற் றாளராக அடையாளம் காணப் பட்டதையடுத்து அந்தக் கிரா மம் பொலிஸாரால் தற்காலி கமாக முடக்கப்பட்டுள்ளது.

கல்மடு கிராமத்தில் சில ருக்கு காய்ச்சல் இருப்பதாக வவுனியா வடக்கு சுகாதார பிரி வினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் எழுமாறாக அன்ரிஜென் பரிசோதனை முன் னெடுக்கப்பட்டது. அதில் கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து குறித்த கிராமம் பொலிஸாரால் தற்கா லிகமாக முடக்கப்பட்டுள்ள துடன், பொலிஸார் பாதுகாப் புக் கடமைகளில் ஈடுபட்டு வரு கின்றனர்.

இதேவேளை, கிடைக்கப் பெற்ற முடிவுகளின் அடிப் படையில் புளியங்குளம் கல் மடுப் பகுதியில் 35 குடும்பங் கள் உள்ளன. அதில்19 குடும்பங் களில் எழுமாற்றாக மேற்கொள் ளப்பட்ட அன்ரிஜென் பரிசோ தனையில் 13 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கிராமம் தற்காலி கமாக முடக்கப்பட்டுள்ளது. 10 நாட்களின் பின்னர் மீண்டும் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டால் மாத் திரமே கிராமம் முடக்க நிலை யில் இருந்து விடுபடும் என சுகாதார பிரிவினரின் தகவல் கள் தெரிவிக்கின்றன.

# நாட்டில் கொரோனா சமூக பரவல் இல்லை!

## உறுதிபட கூறுகிறது சுகாதார அமைச்சு

கொழும்பு, ஒக.21

**தொற்று தொடர்பு மூலம் கண்டறியப்படாமல் சமூகத் துக்குள் இருந்து ஏராளமாக தொற்று நோயாளர்கள் தினசரி கண்டறியப்பட்டுவருகின்றபோதும் இன்னமும் நாட்டில் சமூகத் தொற்று ஏற்படவில்லை என சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.**




"தொற்று நோய் சமூகப் பர வலுக்கும் சமூகத்தில் இருந்து நோயாளிகள் கண்டறியப்படுவ தற்கும் வித்தியாசம் உள்ளது" என கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் எழுப்பப் பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதி லளித்த சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் விளக்கம் ஒன்றை அளித்தார்.

சமூகத்தில் இருந்து தொற்று நோயாளர்கள் கண்டறியப் பட்டு வருகின்றனர். எனினும் இது சமூகப் பரவல் இல்லை என அவர் தெரிவித்தார்.

ஆனால், நாட்டில் தொற்று நோயாளர் தொகை கடுமையாக உயர்ந்துள்ளது என்ற உண் மையை ஒப்புக்கொள்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் மக்கள் பொறுப்பற்றுச் செயல்பட்ட தன் விளைவை நாங்கள் இப் போது அனுபவிக்கிறோம். மக் கள் சுகாதார வழிகாட்டல்களை புறக்கணித்து அலட்சியமாக நடந்துகொண்டதே தற்போ தைய நிலைமைக்குக் காரணம்.

இனியேனும் மக்கள் சுகா தார வழிகாட்டுதல்களை கண் டிப்பாக கடைபிடிக்க வேண்டி யது அவசியம். இல்லையெனில் நிலைமை மிகவும் பயங்கரமாக மாறும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டல்களில் பிரகாரம் தொற்று தொடர்பு மூலம் தெரி யாமல் அதிக எண்ணிக்கையி லான மக்கள் சமூகத்தில் இருந்து கண்டறியப்படும் போதே அது ஒரு சமூக தொற்று என அழைக்கப்படு கிறது என அவர் சொன்னார்.

இதேவேளை, நாட்டில் கொரோனா சமூகப் பரவலாக மாறவில்லை என இப்போதும் கூறிக்கொண்டிருப்பது அபத்த மானது என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலை வர் உபுல் ரோஹண விமர்சித் துள்ளார்.

நாட்டில் தற்போது கண்ட றியப்படும் 80 வீதமான தொற்று நோயாளர்களின் தொடர்பு மூலங்கள் கண்ட றியப்படவில்லை. பொது மக் களுடன் நெருக்கமாக பணி யாற்றும் எங்களுக்கே கள யதார்த்தம் தெரியும். தற்போ தைய நிலைமை மிக-மிக ஆபத்தானது என்று அவர் வலியுறுத்தினார்.

இந்நிலையில் சுகாதார அதி காரிகள் இன்னும் சமூகப் பர வல் இல்லை எனக் கூறி உண்மை நிலையை மூடி மறைத்து வரு வது ஆச்சரியமாக உள்ளது என வும் பொதுச் சுகாதாரப் பரி சோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கூறினார்.

# கொரோனாவால் வவுனியாவில் மேலும் மூன்று பெண்கள் பலி!

வவுனியா, ஒக. 21

வவுனியாவில் கொரோனா தொற்று காரணமாக நேற்று முன்தினம் மேலும் மூவர் மரண மடைந்தனர்.

வவுனியா பம்பைமடு தனி மைப்படுத்தல் மையத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் கோவிட் தொற்று நோயால் மரணமடைந்தார்.

அத்துடன் பெரியார்குளம் பகுதியில் சுகவீனம் காரணமாக வீட்டில் மரணமடைந்த பெண் ணுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிசெய் யப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா குடியிருப்பு பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டிருந் தார்.

அவருக்கு முன்னெடுக்கப் பட்ட பி.சி.ஆர் பரிசோதனை யில் கொரோனா தொற்று உள் ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவர் வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சேர்க் கப்பட்டிருந்த நிலையில் மரண மடைந்தார்

வவுனியாவில் கொரோனா தொற்றால் நேற்றுமுன்தினம் மாத்திரம் 3 பெண்கள் மரண மடைந்தமை குறிப்பிடத்தக் கது.

# எரிபொருள் தட்டுப்பாடு இல்லை!

## அமைச்சர் உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, ஒக. 21

நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை இல்லை என்று எரிசக்தி அமைச்சர் உதய கம் மன்பில தெரிவித்தார்.

எரிபொருள் பற்றாக்குறை விரைவில் ஏற்படும், சில நாள்களுக்கு போதுமான பெற்றோல் மற்றும் டீசலே கையிருப்பில் உள்ளது என்ற தகவலின் காரணமாக பல பகுதிகளில் எரிபொருள் நிரப்



பும் நிலையங்களுக்கு அருகில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்க ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிக் கையில்-

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை.

அப்படியொரு நிலைமை யேற்பட்டால், அதை முதலில் நானே மக்களுக்கு அறிவிப்பேன். மக்களுக்கு உண்மையாக இருப் பதால், எரிபொருள் விலை யேற்றத்தையும் நானே முதலில் அறிவித்தேன் -என்றார்.

# எரிபொருள்களுக்கும் தட்டுப்பாடு வரலாம்

கொழும்பு, ஒக. 21

நாட்டில் எதிர்வரும் நாட் களில் எரிபொருளுக்கு தட்டுப் பாடு ஏற்படக்கூடிய நிலை உருவாகியுள்ளதாக கனியவள தேசிய சேவையாளர்கள் சங்கத் தின் இணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனை தெரி வித்தார்.

தற்போது 11 நாட்களுக்கு போதுமான டீசல் இருப்பில்



உள்ளதாகவும், 10 நாட்களுக்கு போதுமான பெற்றோல் மாத் திரமே இருப்பில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நாடு முடக்கப்படின் அரச, தனியார் ஊழியர்களுக்கு சம்பள குறைப்பு

## ஜனாதிபதிக்கு பிரசன்ன ரணதுங்க யோசனை

கொழும்பு, ஓக. 21

**நாடு முழுவதும் ஊரடங்கு விதிப்பது குறித்து முடிவு செய்யப்பட்டால், பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தில் 75 சதவீதமும், சுகாதாரத் துறை தவிர்ந்த அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தில் 50 சதவீதமும் மற்றும் சிற்றூழியர்களின் சம்பளத்தில் 30 சதவீதமும் நன்கொடையாக வழங்கவேண்டும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதிக்கு முன்மொழிந்துள்ளார்.**

இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில், நாட்டை முடக்க முன் அன்றாடம் வருமானத்துக்காக உழைப்பவர்கள் பற்றி கவனம் செலுத்தும்படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும், நாட்டை முடக்குவதாயின் சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினரை தவிர்ந்த ஏனைய அனைத்து தரப்பினரின் சம்பளத்தில் இருந்து குறிப்பிட்ட ஒரு தொகையை அரசாங்கம் அறவிட வேண்டுமென அவர் யோசனையொன்றை முன்வைத்துள்ளார்.

அதன்படி, பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தில் இருந்து 75 சதவீத தொகையும், அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து 50 சதவீதமும், சிறு தொழில் செய்யும் தொழிலாளர்களிடமிருந்து 30 சதவீதமும் அரசாங்கம் அறவிட வேண்டுமென அவர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.




# மந்திகை சந்தை மீண்டும் திறப்பு

வடமராட்சி, ஓக. 21

பருத்தித்துறை பிரதேச சபையின் மந்திகை பொதுச்சந்தை இரு வாரகால முடக்கத்தின் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இச்சந்தை வியாபாரிகள் மத்தியில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டபோது இருவருக்கு கொரொனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து ஏனைய வியாபாரிக ள் அனைவரும் இரு வாரங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இரு வாரகாலம் நிறைவுற்றதும் அவர்கள் மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டபோது வெற்றிலை வியாபாரி ஒருவருக்கு கொரொனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து வெற்றிலை வியாபாரி தவிர ஏனைய வியாபாரிகள் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டு பொதுச் சந்தை திறக்கப்பட்டது.

(அ-02)

# மடுல்சீமை நகருக்கும் பூட்டு!

கொழும்பு, ஓக. 21

நாட்டில் கோவிட் பரவல் தீவிரமடைந்துள்ளதைக் கருத்திற் கொண்டு லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மடுல்சீமை நகரில் இயங்கிவரும் வர்த்தக நிலையங்களை இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 6.00 மணிவரை மூடி வைக்க மடுல்சீமை வர்த்தகர் சங்கத்தினர் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர் என சங்கத்தின் செயலாளர் எம்.தினேஷ்குமார் தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் ஏ.சசிகுமார் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பசறை தேர்தல் தொகுதியில் லுணுகலை நகரத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பவித்ராவின் கணவருக்கு கொரோனா

கொழும்பு, ஓக. 21

போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் கணவராகிய காஞ்சன ஜயரத்னவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் தற்போது மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை யொன்றில் சேர்க்கப்பட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

காஞ்சன ஜயசேகர சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் என்பதோடு, தற்போது போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் தனிப்பட்ட செயலாளராக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இரத்ததானம் வழங்கிய இராணுவம்

யாழ்ப்பாணம், ஓக. 21

கொரோனா காலத்தில் ஏற்படும் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக யாழ்.மாவட்ட இராணுவத்தினரால் குருதி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று காலை இடம்பெற்றது.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடிதுவக்கு தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட குருதி வழங்கும் நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் உள்ள 200இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கலந்துகொண்டு குருதி வழங்கினர்.

# மன்னாருக்குள் டெல்டா தொற்று நுழையும் விதமாக செயல்படாதீர்!

## மக்களிடம் அவசர கோரிக்கை

மன்னார், ஓக. 21

மன்னார் மாவட்ட மக்கள் தற்போது சுகாதார வழிமுறைகளை கடைபிடிப்பதில் முன்னேற்றம் காணப்பட்டாலும், இதனையும் விட கூடுதலான அளவில் மிக கடுமையாக சுகாதார வழிமுறைகளை கடைபிடித்து தற்போது நாடு முழுவதும் பரவும் 'டெல்டா' தொற்று மன்னார் மாவட்டத்திலும் தாக்கம் செலுத்துவதை தவிர்த்துக் கொள்ளும் வகையில் செயல்படவேண்டும் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை வரை கொரோனா தடுப்பூசியின் முதலாவது டோஸ் 59 ஆயிரத்து 126 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது. இவர்களில் 1300 பேர் கர்ப்பவதிகளாக உள்ளனர்.

இதேவேளை 2 ஆவது தடுப்பூசி நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை வரை 47 ஆயிரத்து 406 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

இந்த மாதம் தற்போது வரை 327 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுவே ஒரு மாதத்தில் இதுவரை மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள அதிகூடிய எண்ணிக்கையான நோயாளிகளின் தொகையாகும். புத்தாண்டு கொத்தணி உடன் தொடர்புடைய 1,016 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 1368 பேரும்,இவ்வருடம் மாத்திரம் 1351 பேரும் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

இந்த மாதம் மொத்தம் 1500 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு மொத்தம் 27 ஆயிரத்து 400 வரையிலான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 0.86 விதமாக காணப்படும் மரண வீதம் உயர்வடைந்து தற்போது 0.96 வீதமாக காணப்படுகின்றது.

நாட்டில் இடம் பெற்றுவரும் கொரோனா மரண வீதத்துடன் ஒப்பிடும்போது குறைவாக காணப்பட்டாலும்,எமது மரண வீதம் அதிகரித்து செல்வதை காட்டுகிறது.

எனவே மக்கள் மிகவும் அவதானத்துடன், சுகாதார கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து நடந்து கொள்ள வேண்டும்.

நோய் அறிகுறிகள் காணப்படுபவர்கள் வீடுகளில் தனித் திருக்காமல் உடனடியாக வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவேண்டும்.

தற்போது தொற்றாளர்களுக்கு வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்கப்படுவதினால் மக்கள் எவ்வித அச்சமும் இன்றி நோய் அறிகுறிகள் காணப்பட்டால் அருகில் உள்ள வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகர் ஆகியோருக்கு அறிவித்து தங்களுக்கான சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

# வர்த்தக நிலையங்களை மூடுவதால் எவ்வித பயனும் கிடைக்கமாட்டாது

## இராணுவத் தளபதி கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 21



வர்த்தக நிலையங்களை சுயமாக மூடுவதால் எவ்வித பயனும் கிடையாது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையை உணர்ந்து வர்த்தகர்கள், தங்களது வர்த்தக நிலையங்களை சுயமாக மூடியுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால், சாதாரண மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயல்படுவது அவசியமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதாவது, வர்த்தக நிலையங்களை மூடியுள்ளமையால் ஒரு சில இடங்களில், நுகர்வோர் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக வேறு பகுதிகளில் உள்ள நகரங்களுக்கு செல்கிறார்கள். ஆகவே வர்த்தக நிலையங்களை சுயமாக மூடுவதால் எவ்வித பயனும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். புதிய சுகாதார பாதுகாப்பு வழிகாட்டலின் அடிப்படையில் பொது மக்கள் செயற்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அதாவது, வீட்டிலிருந்து ஒருவர் மாத்திரம் வெளியில் செல்ல முடியும். எனினும் தொழில் மற்றும் அத்தியாவசிய சேவைக்காக வெளியில் செல்லும்போது ஒருவர் என்ற அறிவுறுத்தல் தாக்கம் செலுத்தாது என அவர் குறிப்பிட்டார்.



# அநீதியிலிருந்து காப்பாற்றுங்கள்

## மகாநாயக்கரிடம் முறையிட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள்

கொழும்பு, ஒக. 21

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் சிலர் அஸ்கிரிய மகா நாயக்க தேரர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன தேரரை நேற்று முன்தினம் முற்பகல் சந்தித்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணையில் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாக முறையிட்டுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக தமக்கு எதிராக இடம்பெறும் விசாரணைகள் காரணமாக பல்வேறு சிக்கல்களை எதிர் கொண்டுள்ளதாகவும், தமக்கு எதிரான நடவடிக்கைகளை இடைநிறுத்த நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் மகாநாயக்கரிடம், பொலிஸ் அதிகாரிகள் கோரினர்.

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், நிர்வாக செயல்பாடுகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நந்தன முனசிங்க, மொனராகலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார ஹேரத், நுவரெலியாவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்தன அத்துகோரள, முல்லைத்தீவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நுவான் குமாரசேகர உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்புக்கு சென்றனர்.

"புலனாய்வுத் தகவல்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசாங்கமோ, பாதுகாப்பு அமைச்சோ பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருக்கவில்லை. யுத்தத்தின் பின் மிகவும் அமைதியான, நல்லிணக்கம் என்ற கோட்பாடே அரசாங்கத்தால் முன்னிலைப்படுத்தப்பட்டது.

குறிப்பாக முஸ்லிம் மக்களுடன் நெருங்கிய தொடர்பிருந்ததால், பயங்கரவாத அமைப்புக்கள் குறித்து ஆழமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நாட்டில் ஒரு முழுமையான அமைதி நிலவியது. அந்த நேரத்தில் நடந்த, இந்த துரதிஷ்டவசமான சம்பவத்தால் நாடு சுமார் 300 அப்பாவி உயிர்களை இழந்தது.

பொலிஸ் அதிகாரிகள் இந்த தாக்குதலுக்கு ஒத்துழைக்கவில்லை. அந்த சமயத்தில் பொறுப்புக்களை வகித்தார்கள் என்பதால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை ஆணைக்குழு எம்மை விசாரணைக்கு பெயரிட்டது. இது அந்த அதிகாரிகளுக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி இந்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், அவர்களின் ஓய்வு காலம், ஓய்வூதியம் என்பன சிக்கலாகும்.

பயங்கரவாத தாக்குதலுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ பங்களிக்காத இந்த அதிகாரிகள், அந்தப் பகுதியில் கடமையிலிருந்தமைக்காக அவர்கள்மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுமானால் எதிர்காலத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மனரீதியாக பாதிக்கப்படுவார்கள்" என்று அவர்கள் கூறினர்.

மொனராகலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார ஹேரத் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

தலதா மாளிகையின் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது உயிர் சேதம் ஏற்பட்டது. ஜய சிறி மகா போதி மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது உயிர்ச்சேதம் ஏற்பட்டது. உலகில் இதுபோன்ற எண்ணற்ற தாக்குதல்கள் நடக்கின்றன. உயிரிழப்பு ஏற்படுகிறது. எனினும், உலகில் எங்குமே, அந்த நேரத்தில் பணியில் இருந்த அதிகாரிகளுக்கு எதிராக இதுபோன்ற முடிவு எடுக்கப்படவில்லை.அநியாயம் செய்யப்படவில்லை. இது அநீதியானது. இதை சொல்ல எவருமில்லை. எங்கும் சட்டமில்லை. இதை சொல்ல எமக்கு அதிகாரமில்லை. நாம் எமது தேரர்களிடம் சொல்ல முடியும். தலதா பெருமானிடம் கூற முடியும்.

எனக்கு அருகிலுள்ள சந்தன அத்துகோரள அன்று நீர் கொழும்பு வலயத்துக்கு பொறுப்பாக இருந்தார். இன்று நுவரெலியாவுக்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர். இன்னும் 3 நாளில் ஓய்வு பெறுகிறார். ஓய்வூதிய மின்றி, சம்பளமின்றி, தொழிலின்றி வீட்டுக்கு போகிறார்கள்.

இதேபோல எனது பிரதிப்பொலிஸ்மா அதிபர் கண்ணீருடன் இருக்கிறார். இது இறுதித்தருணம். இதை யாரிடம் போய் சொல்வதென யோசித்து ஒன்றுகூடினோம்.

தாக்குதல் எச்சரிக்கை பற்றி எமது உயரதிகாரிகளுக்கு தகவல் கிடைத்து, ஓரிரு நாட்களில் இந்த தாக்குதல் நடந்துள்ளது. நல்லாட்சி அரசாங்கம் இந்த குற்றச்சாட்டை யார் மீதாவது சுமத்தி, இந்த 20, 30 பொலிஸ் அதிகாரிகளை சிறைப்பிடிக்க தயாராகிறது.-என்றார்.

# நாட்டை 2 வாரம் முடக்குவதால் பொருளாதாரம் சரிவடையாது!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக.21

**நாட்டை இரண்டு வாரங்கள் முடக்குவதால் பொருளாதாரம் முழுவதும் சரிவடைந்து விடப்போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது ஹர்ஷ டி சில்வா மேலும் கூறியுள்ளதாவது:

சுதந்திரத்துக்கு பின்னர் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

குறுகிய காலத்தில் நாம் பாரிய சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. யதார்த்தத்தை புரிந்து கொள்ளாமல் நிலைமையை மறைப்பதற்காக வேறு செயல்பாடுகளை முன்னெடுப்பதால் மக்களே பாதிக்கப்படுவர்.

மேலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் பொருளாதாரம் ஒரே தடவையில் திடீரென வீழ்ச்சியடையாது.

அத்துடன் அளவுக்கு அதிகமாக நாணயத்தாள்களை தொடர்ச்சியாக அச்சிடுவதால் பணவீக்கம் உயர்வடையும்.

இதனால் பொருள்களின் விலையும் அதிகரிக்கும். இதிலும் மக்களே பாதிக்கப்படுவர்.

ஆகவே, இந்த விடயங்களில் உலக நாடுகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அவதானித்து, அதிலிருந்து அனுபவங்களைப் பெற்று மக்களை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்-என்றார்.

# 5-6 நாள்கள் அறிகுறிகளை காட்டாத டெல்டா தொற்று

கொழும்பு, ஒக. 21

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் டெல்டா வைரஸ் பரவுவது குறித்து மற்றொரு கண்டுபிடிப்பை செய்துள்ளது.

டெல்டா வகை நோய்த்தொற்று மற்றும் அறிகுறிகளைக் காட்ட 5 முதல் 6 நாள்கள் ஆகும் என்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் நுண் உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர், மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

"தொற்று மற்றும் அறிகுறிகளுக்கு இடையிலான இடைவெளி சுமார் 2 நாள்கள் ஆகும். இருப்பினும், டெல்டா வைரஸுக்கு முன்பு, இடைவெளி ஒரு நாளுக்கு குறைவாகவே இருந்தது.

இதனால், அறிகுறிக்கு முந்தைய காலத்தில் டெல்டா திரிபு பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து இன்னொருவருக்கு பரவும் அபாயம் 74 சதவிகிதம் அதிகம். வைரஸ் வேகமாக பரவுவதற்கு இதுவே காரணம்.

தடுப்பூசி போடாதவர்களைவிட தடுப்பூசி போட்டவர்கள் டெல்டா வைரஸால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் சுமார் 65 சதவீதம் குறைவு என்று தெரியவந்துள்ளது.

டெல்டா வகையின் தொற்றுநோயைத் தடுக்க தடுப்பூசி மிகவும் முக்கியமானது" என்றும் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

# நாட்டை நாம் முடக்குவோம்

## மருத்துவ ஆய்வுகூட நிபுணர் சங்கம்

கொழும்பு, ஒக. 21

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாடு முடக்கப்படும் என சுகாதார வைத்திய ஆய்வுகூட நிபுணர் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

நாட்டை முடக்கும் வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பல தொழிற்சங்கங்கள் பொது வேலைநிறுத்தத்தை தொடங்கவுள்ளன எனவும் அவர் கூறினார்.

இந்நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் நாட்டை முடக்கியே ஆக வேண்டிய அழுத்தம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளதாகவும் ரவி குமுதேஷ் குறிப்பிட்டார்.

## நானுஓயா, நுவரெலியா பிரதேசங்களில்

# எரிபொருள் நிலையங்களில் காத்திருக்கும் பொதுமக்கள்!

கொழும்பு, ஒக. 21

எரிபொருள் தட்டுப்பாடு நிலவக்கூடும் என்ற செய்தி வெளியானதை அடுத்து எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசைகளைக் காண முடிந்தது.

குறிப்பாக நானுஓயா, நுவரெலியா பிரதேசங்களில் எரிபொருள் நிலையங்களில் மக்கள் வரிசையில் நின்றதைக் காண முடிந்தது.

எரிபொருளுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அறிவித்துள்ளார்.

அவ்வாறு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுமாயின் அதுகுறித்து அறியத்தருவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# சீனா கொடுத்த பல்லாயிரம் கோடி கடன்; ஆதிக்கம் செலுத்தவா? உதவி செய்யவா?

● ரஞ்சன் அருண் பிரசாத்


சீனாவிடமிருந்து இலங்கை கடந்த 17ஆம் திகதியன்று 61.5 பில்லியன் இலங்கை ரூபாய் (6150 கோடி இலங்கை ரூபாய்) மதிப்பிலான கடனுத வியை உடன்படிக்கையொன்றின் ஊடாக பெற்றுக் கொண்டுள்ளது.

இலங்கைக்கான சீன தூதரகம் தனது டுவிட்டர் பக்கத்தில், பதிவொன்றின் ஊடாக இந்த தகவலை வெளியிட்டிருந்தது. இலங்கையின் கோரிக்கைக்கு அமையவே இந்த கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடனால் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்கும் என்ற விமர்சனம் எழுந்துள்ள அதே வேளையில், வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்தவே கடன் வாங்கப்பட்டுள்ளது என்று இலங்கை அரசு தெரிவிக்கிறது.

கோவிட் ஒழிப்பு நடவடிக்கைகள், பொருளாதா ரத்தை கட்டியெழுப்புதல் மற்றும் நிதி ஸ்திரத்தன் மையை உறுதிப்படுத்துதல் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த கடன் வழங்கப்பட்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

இலங்கையில் கோவிட் தொற்று பரவ ஆரம்பித்த காலம் முதல், நாடு பாரிய பொருளாதார சிக்கல்களை




எதிர்நோக்கி வருவதாக ஆளும் தரப்பு அனைத்து சந் தர்ப்பங்களிலும் தெரிவித்து வருகின்றது.

இலங்கையின் பிரதான வருமான வழியான சுற்று லாத்துறை, 2020ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் முழு மையாகவே பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஏனைய வருமான வழிகளும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அந்நிய செலாவணி வருமானங்களும் குறைவடைந்துள்ளன. இதனால், இலங்கை அரசாங்கம் பாரிய பொருளாதார வீழ்ச்சிகளை சந்தித்து வருவதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்ற நிலையிலேயே, இந்த கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**வெளிநாட்டுக் கடனில் சிக்கி தவிக்கும் இலங்கை**

சீனாவிடமிருந்து அரசாங்கம் அவசரமாக இந்த கடனை பெற்றுக்கொண்டமை குறித்து, பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீட பேராசிரியர் சங்கரன் விஜயச்சந்திரனிடம் பி.பி.சி. தமிழ் வினவியது.

நாடொன்றிற்கு குறைந்தது மூன்று மாத காலத்திற்கு தேவையான அந்நிய செலாவணி இருப்பு இருக்க வேண் டும் எனவும், ஆனால் இலங்கை வசம் தற்போது அந்நிய செலாவணி இருப்பு கிடையாது. இதனால், கட னொன்றை பெற்றுக்கொள்ளும் போது, அந்நிய செலா வணி இருப்பு அதிகரிக்கும் என கூறிய அவர், அதனூ டாக ரூபாயின்பெறுமதி வீழ்ச்சியை கட்டுப்படுத்திக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

தற்போது இலங்கை அரசாங்கத்திற்கு வரி வருமா னங்கள் குறைவடைந்து, ஏற்றுமதி குறைவடைந்து, சம்பளத்தை கூட வழங்க முடியாத நிலைமை ஏற் பட்டுள்ளது. அதேவேளை, அரசாங்கத்தினால் செலுத்த வேண்டிய வெளிநாட்டு கடன்களின் அளவு அதிகரித் துள்ளது. எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னர், பெருமளவிலான கடன் தொகையை செலுத்த வேண் டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல் நடத்துவதற்கு தயாராகி வருகின்றமையினால், கீழ் மட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி பணிகளை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ள தாக பேராசிரியர் சங்கரன் விஜ யச்சந்திரன் தெரிவிக்கின்றார்.

இலங்கையில் கோவிட் பரவல் வெகுவாக அதிகரித்துள்ள நிலை யில், அதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர எந்தவொரு தரப்பும் உதவிகளை செய்ய முன்வராத கார ணத்தினால், இவ்வாறான கடன்க ளின் ஊடாக பங்களிப்புக்களை செய்ய முடியும் என அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப் பிடுகின்றார்.

**குறைந்த காலம் அதிக வட்டி**

சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடன் தொகைக்கு வட்டி வீதம் அதிகம் எனவும், குறு கிய காலத்தில் இந்த கடனை செலுத்த வேண்டும் எனவும் அவர்

> **சீனா, மானியங்களை வழங்காது. கடன்களையே வழங்கும் சீனா, தமது வர்த்தக நோக்கங்களை அடிப்படையா கக் கொண்டே, இவ்வாறான கடன்களை வழங்குவதாகவும், அதனால், சீனா விடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொகையானது, இலங்கையை சீனாவின் ஆளுகைக்குள் வைக்கும் நிலைமையை ஏற்படுத்தும் என பேரா சிரியர் சங்கரன் விஜயச்சந்திரன் குறிப் பிடுகின்றார்.**

கூறுகின்றார். அவ்வாறு குறுகிய காலத்தில் கடன் தொகையை செலுத்த தவறும் பட் சத்தில், நாட்டிலுள்ள சொத்துகளை சீனாவிற்கு எழுதி கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

அவ்வாறு இல்லையென்றால், பல்வேறு தேவையற்ற ஒப்பந்தங்களுக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும் என அவர் தெரிவிக்கின்றார். சர்வதேச செலாவணி நிதி யம் அல்லது உலக வங்கி போன்ற நிறுவனங்களிட மிருந்து கடனை பெற்றுக்கொள்ளும் போது பிரச் னைகள் இருக்காது என கூறிய அவர், நாடொன் றிடமிருந்து கடன் வாங்கும் போது பிரச்னை காணப் படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சீனா, மானியங்களை வழங்காது. கடன்களையே வழங்கும் சீனா, தமது வர்த்தக நோக்கங்களை அடிப் படையாகக் கொண்டே, இவ்வாறான கடன்களை வழங் குவதாகவும் பேராசிரியர் தெரிவிக்கின்றார். அதனால், சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொகையானது, இலங்கையை சீனாவின் ஆளுகைக்குள் வைக்கும் நிலைமையை ஏற்படுத்தும் என பேராசிரியர் சங்கரன் விஜயச்சந்திரன் குறிப்பிடுகின்றார்.

பொருளாதார ரீதியில் எதிர்நோக்கியுள்ள பிரச்னை களை தீர்த்துக்கொள்ளும் வகையிலேயே இந்த கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இலங்கை சீன அரசாங்கத்திடமிருந்து பல்வேறு கடன்கள், அபிவிருத்தி திட்டங்களுக்கான முதலீடுகள் என பெருந்தொகையான பணத்தை பெற்றுக்கொண்டுள்ளது.

**அரசு என்ன கூறுகிறது?**

குறிப்பாக இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் தேதி 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கான ஒப்பந்த மொன்றில் இலங்கை அரசாங்கமும், சீன அபிவிருத்தி வங்கியும் கைச்சாத்திட்டிருந்தன.

இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகம், அம்பாந்தோட்டை விமான நிலையம், தெற்கு அதிவேக வீதி, கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுக நகர் உள்ளிட்ட மேலும் பல திட்டங்களை சீன அர சாங்கம் முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறான நிலை யில், இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாகவே சீனா விடமிருந்து கடன்களை பெற்று வருகின்றது. குறிப்பாக சீனாவிடமிருந்து 10 பில்லியன் யுவானை (சுமார் 150 கோடி டொலருக்கு நிகரான சீன பணம்) பெற்றுக் கொண்டுள்ளதாக மே மாத இலங்கை மத்திய வங்கியின் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் எதிர்நோக்கியுள்ள பிரச்னை களை தீர்த்துக்கொள்ளும் வகையிலேயே தாம் வெளி நாடுகளிடமிருந்து கடன்களை பெற்றுக்கொள்வதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில பி.பி.சி. தமிழுக்கு தெரிவித்தார். குறிப்பாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு இடையில் வருடாந்தம் சுமார் 800கோடி ரூபாய் வரை இடை வெளியொன்று காணப்படுகின்றமையினால், இந்த காலப் பகுதியில் அதனை ஈடு செய்துக்கொள்வதற்காக இறக்குமதி இயலுமான வரை நிறுத்தப்பட்டுள் ளதாக வும் அவர் கூறினார்.

சுற்றுலாதுறை, வெளிநாடு பணியாளர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளிலேயே அதனை இதுவரை காலமும் ஈடு செய்து வந்துள்ளதாக வும் அவர் குறிப்பிடுகின்றார்.இந்த மூன்று விதமான வருமானங்களும், கொவிட் நிலைமைக்கு மத்தியில் இன்று பூச்சியமாகியுள்ளதெனவும் அவர் தெரிவிக்கின்றார்.இந்த இடை வெளியை நிரப்புவதற்காக இயலு மான வரை இறக்குமதி நிறுத்தப்பட் டுள்ள போதிலும், அதனையும் ஈடு செய்துக்கொள்ள முடியாதமையி னாலேயே கடன் பெற வேண்டிய நிலைக்கு தாம் தள்ளப்படுவதாகவும் அவர் கூறுகின்றார்.

பி.பி.சி.



● நியூசிலாந்து சிற்சபேசன்

# நியூசிலாந்தை முடக்கிய ‘டெல்டா’

**“ சமூகப் பரவலைக் கட்டுப்படுத்த தொழில்நுட்பம் பயன்படுகின்றது. ஸ்மார்ட்போன் மூலமாக பயன்படுத்தக் கூடிய கியூஆர் கோர்ட் ஸ்கானர், புளூடூத் தொழில்நுட்பங்கள் மூலமாக ஒருவர் போகின்ற இடங்களைத் திகதி மற்றும் நேரம் என்பவற்றுடன், கைபேசியிலேயே (எலக்ட்ரோனிக் டயரி வழியாக) பதிவுசெய்யக்கூடிய வழிமுறை நியூசிலாந்தில் காணப்படுகின்றது.**



நியூசிலாந்தில் டெல்டாபரவல் ஏற்பட்டிருக்கின்றது. அதனால் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட்17ஆம் திகதி வழமைபோன்றே ஆரம்பமாகியது. அது ஒரு செவ்வாய்க்கிழமையாகும். காலநிலை மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டது. மதியம் ஒரு மணியளவில் சமூகப்பரவல் குறித்த முதல் தகவல் அரசுக்கு கிடைத்திருக்கின்றது. அவசரமாக அமைச்சரவை கூடியிருக்கின்றது. அந்தத்தகவல் அரசல்புரசலாக வெளியே கசிந்தபோது, சமூகப்பரவல் ஏற்பட்டிருப்பதான சலசலப்பு ஏற்பட்டது. அரசல்புரசலான தகவல் ஆரோக்கியமற்றது என்பதனை அரசு உணர்ந்து கொண்டது. அதனால், விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர், மாலை ஆறுமணிக்கு பிரதமரின் செய்தியாளர் சந்திப்பு நடைபெறுமென, உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அரசின் முக்கிய அறிவிப்புக்களை, பாராளுமன்ற வளாகத்திலுள்ள செய்தியாளர் அரங்கில் வெளியிடுவது நியூசிலாந்தின் மரபாகும். அதனை, தொலைக்காட்சிகளும் வானொலிகளும் நேரலையாக அஞ்சல் செய்கின்றன. அந்தவகையிலே, மக்களுடனான வெளிப்படையான தொடர்பாடலை அரசு பேணுகின்றது.

மாலை ஆறுமணிக்கு பிரதமரின் செய்தியாளர் சந்திப்பு நடைபெறுமென்னும் தகவலே, சமூகப்பரவல் ஏற்பட்டுவிட்டதற்கான கட்டியமாகிவிட்டது. பொதுமக்களிடையே சலசலப்பு அதிகரித்தது. அநேகமானவர்கள் நேரத்துடனேயே அலுவலகத்திலிருந்து புறப்பட்டார்கள். பொதுமுடக்கம் ஏற்படுகின்றபட்சத்தில், வீட்டிலிருந்து வேலைசெய்வதற்குத் தயாராகினர். கணிப்பொறி (லேப்டாப்) போன்ற உபகரணங்களையும் காவிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்கள். பொதுவாக மாலை ஐந்துமணிக்குப் பின்னர் ஏற்படுகின்ற ரயில், பஸ் மற்றும் வீதிநெரிசல், இரண்டுமணி நேரம் முன்னதாகவே ஆரம்பித்துவிட்டது.

பிரதமரின் செய்தியாளர் சந்திப்புக்கான காத்திருப்பு நீண்ட நெடியதாகவே தென்பட்டது. அதற்காகத் தேசமே காத்திருந்தது. சமூகப்பரவல் ஏற்பட்டமையை, பிரதமர் பூர்வாங்கமாக மாலை ஆறு மணிக்கு அறிவித்தார். ஒருவருக்கு மட்டுமே தொற்று அடையாளமாகியிருந்தது. அது டெல்டா திரிபா என்பது உறுதியாகியிருக்கவில்லை. ஆனாலும், அதுதொடர்பில் வலுவான ஊகம் காணப்பட்டது. அதனால் வேகமாகச் செயல்பட அரசு துணிந்தது. மூன்று நாள் தேசம்தழுவிய பொதுமுடக்கத்தை அறிவித்தது. ஒக்லாந்துவாசியே தொற்றுக்குள்ளாகியவராகும். கொரமண்டல் பகுதியிலேயும் பயணம் செய்திருந்தார். அதனால், அவ்விரண்டு பிரதேசங்களுக்கும் ஏழுநாள் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டது.

கடந்த ஆறுமாதங்களில் நியூசிலாந்தில் சமூகப்பரவல் ஏற்படவில்லை. அதனால் உள்ளூரில் பயணக்கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. வெளிநாட்டிலிருந்து வருவோருக்கு மட்டுமே இரண்டு வாரக் கட்டாயத் தனிமைப்படுத்தல் காணப்பட்டது. அந்தவகையிலே சமூகப்பரவல் அதிர்ச்சி அளித்தாலும், தேசம் தயார்நிலையிலேயே காணப்பட்டது. அதனாலேயே, ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டவுடனேயே பொதுமுடக்கத்தை அரசினால் அறிவிக்க முடிந்தது. ஆறுமணி நேரத்திலே, அதனை அமுல்படுத்தவும் முடிந்தது. மறுநாள், புதன்கிழமை தெருக்கள் வெறிச்சோடிப் போயிருந்தன.

நான்குபடிநிலை வகைப்படுத்தல் பொதுமுடக்கத்திலே உள்ளன. அதிலே நான்காவதே உச்சமானதாகும். அதுவே தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சுப்பர்மார்கெட், மருத்துவச்சேவை, பெற்றோல்நிலையம் ஆகியவை மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. பள்ளி, உணவகம், மெக்டொனல்ட் போன்ற அனைத்துமே மூடப்படுகின்றன. மரணச்சடங்குக்கு அனுமதி கிடையாது. அத்துடன், மாஸ்க் (முகக்கவசம்) கட்டாயமாக்கப்பட்டுள்ளது.




பொதுமுடக்கத்தை அறிவிப்பதோடு அரசின் பணி நின்றுவிடுவதில்லை. அதனுடைய தொடர்ச்சியாக ஏற்படக்கூடிய விளைவுகளையும் அரசு சிந்திக்கின்றது. பொதுமுடக்கம் காரணமாக ஏற்படுகின்ற, பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்வதற்கான திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. தொழில்நிறுவனங்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகின்றது. வேலைக்குப் போகமுடியாதவர்களுக்குச் சம்பள உதவித்தொகை வழங்கப்படுகின்றது.

மற்றைய வளர்முக நாடுகளோடு ஒப்பிடுகையில், தடுப்பூசி வழங்கலில் நியூசிலாந்து பின்தங்கியே காணப்படுகின்றது. அதேசமயத்தில், தடுப்பூசி வழங்கல் திட்டமிட்டபடியே நடைபெறுகின்றது. தடுப்பூசி வழங்கல் பூர்த்தியாகிய பின்னரும்கூட, சமூகப் பரவலைத் தடுப்பதற்கு குறைந்த வீரியம்கொண்ட பொதுமுடக்கம் தேவைப்படலாம் என்னும் அபிப்பிராயம் நியூசிலாந்தில் காணப்படுகின்றது.

சமூகப் பரவலைக் கட்டுப்படுத்த தொழில்நுட்பம் பயன்படுகின்றது. ஸ்மார்ட்போன் மூலமாக பயன்படுத்தக்கூடிய கியூஆர் கோர்ட் ஸ்கானர், புளூடூத் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதனூடாக, பயனாளி போகின்ற இடங்களைத் திகதி மற்றும் நேரம் என்பவற்றுடன், பயனாளியின் போனிலேயே (எலக்ட்ரோனிக் டயரி வழியாக) பதிவுசெய்யக்கூடிய வழிமுறை நியூசிலாந்தில் காணப்படுகின்றது.

அதன்மூலமாக, தொற்றுக்கு உள்ளாகிய பயனாளி போய்வந்த இடங்கள் வேகமாக அடையாளமாகின்றன. அவ்வாறு அடையாளமாகிய இடம், திகதி, நேரம் போன்றவை உடனடியாகவே அரசால் வெளியிடப்படுகின்றது. தொற்றுக்குள்ளாகிய ஒருவர் பயன்படுத்திய இடங்களிலே இருந்தோரைத் தனிமைப்படுத்திக் கொள்ள அரசு அறிவுறுத்துகின்றது. அத்துடன், பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படும்படியும் கோரப்படுகின்றது.

கூடவே, அரசின் காண்டக்ட்டிரேசிங் அணியினரும், தொற்றுக்குள்ளாகிய ஒருவர் வழியாக, தொற்றுப்பரவுகின்ற மனிதச் சங்கிலியை அடையாளம் காண்கின்றனர். அதன்மூலமாக, தொற்றுக்குள்ளாகியவர்களை கண்காணிப்பு வட்டத்திலே கொண்டுவருகின்றனர். அந்தவகையிலேயே, சமூகப்பரவலைக் கட்டுப்படுத்துகின்ற பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வீடுகளிளிருந்து வெளியேறுகின்ற கழிவுநீர் மாதிரிகள் மூலமாகவும், தொற்று ஏற்பட்ட பகுதிகள் பெருவெட்டில் அடையாளமாகின்றன. அதன்பின்னர், அவ்வாறான பகுதிகளிலே வசிப்போர் பி.சி.ஆர் . பரிசோதனைக்கு உட்படுமாறு கோரப்படுகின்றனர்.

ஆக, ஸ்மார்ட்போன் தொழில்நுட்பம், காண்டக்ட்டிரேசிங், கழிவுநீர் பரிசோதனை, பி.சி.ஆர். பரிசோதனை என்பவை மூலமாக சமூகப்பரவல் அடையாளம் காணப்படுகின்றது. பொதுச் சுகாதாரம், சமூகஇடைவெளி, மாஸ்க், தடுப்பூசி போன்றவை தொற்று ஏற்படாமல் இருப்பதற்கான உபாயங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறாகவே கொரோனாப் பேரிடரை நியூசிலாந்து எதிர்கொள்கின்றது. மக்களுடனான உரையாடல்களிலே வெளிப்படைத்தன்மையை அரசு பேணுகின்றது. மூன்று ஆண்டுகளுக்கொருதடவை வாக்குச்சாவடிக்கு வந்தாகவேண்டும் என்பதை அரசு மறப்பதில்லை. அதே சமயத்தில், அரசு சரியான பாதையில் பயணிக்கும்போது மக்கள் அச்சமின்றிப் பின்தொடர்கின்றனர். அதனாலேயே, குறுகியநேரத்தில் பொது முடக்கத்தை அறிவித்து, அமுல்படுத்தவும் முடிகின்றது. அதற்கு அரசின் தொலைநோக்குத்திட்டமிடலும், தெளிவான தொடர்பாடல்களும் துணை செய்கின்றன. அனைத்திற்கும் மேலாக, பிரதமரின் வாசகமான, ஐந்து மில்லியன் மக்களின் (குழு) என்னும் கூட்டுணர்வு மந்திரச்சக்தியாகின்றது. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாக்கள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

❖ **கீழே தரப்பட்டுள்ள தொடர்புகளை அவதானித்து 14, 15 ஆகிய வினாக்களுக்கு விடையினைத் தெரிவு செய்க.**

□ + △ + ○ = 12

△ + ○ = 6

□ + △ = 10 எனின்,


14. □ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

1) 4 2) 6 3) 2

15. □ × △ = .......... என்பதன் பெறுமானத்தினைக் கணித்துச் சரியான விடையைத் தெரிவு செய்க.

1) 10 2) 20 3) 24


16. எண்கள் எழுதப்பட்ட சக்கரத்திற்கும், சட்டகத்திற்கும் இடையே உள்ள தொடர்பை இனங்கண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




| | | | |
|---|---|---|---|
| 2 | 4 | 5 | 7 |
| 6 | 20 | ...... | 14 |


1) 20 2) 24 3) 25

17. பின்வரும் உருக்களில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.





1) 9 2) 4 3) 6

18. இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?




1) 17 2) 12 3) 18


19. 


மேற்குறித்த தாயக் கட்டையில், B எனக் குறிக்கப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிரேயுள்ள பக்கத்தைக் காட்டும் எழுத்து யாது?

1) C 2) D 3) F

20. 


இச்சதுரமுகி அட்டையை விரிக்கும்போது வரும் மிகப் பொருத்தமான வெட்டுரு எது?





1) 2) 3)

21. புகையிரதத் தொடர் ஒன்றில் உறங்கு நிலை இருக்கை, உள்ள பெட்டியானது முன்னிருந்து பார்க்கும்போது 12 ஆவது பெட்டியாகவும் பின்னிருந்து பார்க்கும்போது 9 ஆவது பெட்டியாகவும் இருக்கும் எனின், இத்தொடரில் உள்ள பெட்டிகளின் எண்ணிக்கை யாது?

1) 20 2) 21 3) 22

22. மயூரி A என்ற இடத்தில் இருந்து வடக்குத் திசை நோக்கி 5 m தூரம் சென்று வலது பக்கமாகத் திரும்பி 10 m தூரம் சென்று அங்கிருந்து தெற்கு நோக்கி 15 m தூரம் சென்று D என்ற இடத்தை அடைந்தாள். A என்ற இடம் D என்ற இடத்திற்கு எத்திசையில் உள்ளது?

1) வடகிழக்குத் திசை 2) வடமேற்குத் திசை 3) தென்மேற்குத் திசை

23. 


இப்படத்தினை அவதானித்து இது ஒரு நாளின் எந்நேரமாக இருக்க முடியும் எனத் தெரிவு செய்க.

1) காலை 5.00 2) மு. ப. 10.00 3) பி.ப 8.00

24. ஒரு பக்கத்தில் 10 தூண்கள் கொண்ட சதுரவடிவ மண்டபம் ஒன்றில் ஓர் இடை வெளியில் ஒரு சிவப்பு நிறப் பூவும், ஒரு மஞ்சள் நிறப்பூவும் கட்டப்பட்டன எனின், மண்டபத்தின் இரு பக்கங்களிலும் கட்டப்பட்டுள்ள பூக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 20 2) 40 3) 36

❖ 25 ஆம், 26 ஆம் வினாக்களுக்கு வென்வரிப்படத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.




25. மூன்று விளையாட்டுக்களிலும் ஈடுபடாத நபர் யார்?

1) F 2) B 3) C

# யாழ்ப்பாணத்தில் ஒரே நாளில் 5 பேர் கொரோனாவால் மரணம்

## மொத்த உயிரிழப்பு 192 ஆக உயர்வு

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்ப்பாணத்தில் மேலும் 5 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் ஒரே நாளில் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மானிப்பாய் சுதுமலை வடக்கைச் சேர்ந்த 92 வயதுடைய ஆண் ஒருவரும், கைதடியைச் சேர்ந்த 43 வயதுடைய ஆண் ஒருவரும், மானிப்பாயைச் சேர்ந்த 85 வயதுடைய ஆண் ஒருவரும், உரும்பிராயைச் சேர்ந்த 86 வயதுடைய ஆண் ஒருவரும், அளவெட்டியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவருமே நேற்று முன்தினம் உயிரிழந்தனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 192ஆக உயர்வடைந்துள்ளது. (இ - 03)





# பஸ் - கனரக வாகனம் நேருக்கு நேர் மோதல்

## இரு சாரதிகளும் படுகாயம்

தலவாக்கலை, ஓக. 21

தலவாக்கலை - ஹட்டன் பிரதான வீதியில் தலவாக்கலை ரணில் நிலையத்துக்கு முன்பாக உள்ள பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் பஸ் ஒன்றும் கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நுவரெலியா பகுதியிலிருந்து ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு ஊழியர்களை ஏற்ற தலவாக்கலை சென்.கிளயார் பகுதியை நோக்கிச் சென்ற பஸ் ஒன்றும், ஹற்றன் பகுதியில் இருந்து நுவரெலியா பகுதிக்குச் சென்ற கனரக வாகனம் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்தில் கனரக வாகனத்தின் சாரதியும், பஸ்ஸின் சாரதியும் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்துக் காரணமாக சுமார் 30 நிமிடங்கள் ஹற்றன் - நுவரெலியா வீதி ஊடான போக்குவரத்து பாதிப்புக்குள்ளாகியது.

குறித்த கனரக வாகனத்தின் சாரதிக்கு வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது போனதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தலவாக்கலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

வவுனியா, ஓக. 21

வவுனியா, புளியங்குளம் பகுதியில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

குறித்த நபர் வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியிருந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த அவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். இந்தநிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் மரணமடைந்துள்ளார். ஆச்சிபுரம் பகுதியை சேர்ந்த அருணா (வயது-48) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தார். (இ)

# ஓட்டோ மோதி ஒருவர் மரணம்

ஹட்டன், ஓக. 21

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில், குடாகம பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கொட்டகலை பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று, குடாகம பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்டவர் மீது மோதியுள்ளது.

இதன்போது பலத்த காயங்களுக்குள்ளான குறித்த நபர், வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 42 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 284 பேர் கைது!

கொழும்பு, ஓக. 21

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 284 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாளில் இருந்து இது வரை அந்தச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் 55 ஆயிரத்து 656 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டில் தற்போது இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 16 - 05 - 1978



ஆண்டவன் அடியில் 18 - 08 - 2021

## கண்ணையா செல்வகுமார்

புங்குடுதீவு 2ஆம் வட்டாரம், ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா Torontoவை வதிவிடமாகவும் கொண்ட கண்ணையா செல்வகுமார் கடந்த (18.08.2021) புதன்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கண்ணையா – சீதேவி தம்பதியரின் அன்பு மகனும், கைலாயபிள்ளை – கலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ராதிகாவின் ஆருயிர்க் கணவரும், அவீன், ஆரியன், அயானா, அமாயா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமாரி (ஜீவா- சுவிஸ்), உதயகுமார் (செட்டி- ஜேர்மனி), விஜயகுமார் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும், நடேசமூர்த்தி, சுதர்சினி, விஜயஸ்ரீ, தர்சனா, தர்சன் ஆகியோரின் அருமை மைத்துனரும், ஆதவன் அவர்களின் பாசமிகு சகலனும், கௌரி, பாலச்சந்திரன், ராமச்சந்திரன், இந்திராணி (ஜேர்மனி Berlin), விமலச்சந்திரன், ரவிச்சந்திரன், ஜெயராணி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், கிசோ, நித்யா, தினேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரிஷி, ஜனனி, சந்தோஷ், ஜசிதா, சஜந், விதுனா, அஸ்ரன், ஏடன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
விஜயன் - சகோதரன் - +14167231669

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# வவுனியாவில் கொரோனா தீவிரம் மேலும் 145 பேருக்கு தொற்று உறுதி

வவுனியா, ஓக. 21

வவுனியா மாவட்டத்தில் மேலும் 145 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.



அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக, மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில், 145 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

# இந்தியா, ஆபிரிக்காவில் போலி தொற்று தடுப்பூசி!

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

ஜெனிவா, ஒக. 20

இந்தியா, ஆபிரிக்காவில் கோவி ஷீல்ட் தடுப்பூசியை போன்று போலி தடுப்பூசிகளை கண்டுபிடித் துள்ளதாக உலக சுகாதார ஸ்தாப னம் தெரிவித்துள்ளது.

இந்த போலி தடுப்பூசி டோஸ் கள் ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப் பட்டன என்று அந்த அமைப்பின் அறிக்கை ஒன்று கூறுகின்றது.

பறிமுதல் செய்யப்பட்டவை போலி தடுப்பூசிகளே என்பதே இந்தியாவில் தடுப்பூசியை உற்பத்தி செய்யும் சீரம் இன்ஸ்ரிரியூட் ஒவ் இந்தியா நிறுவனம் உறுதி செய்துள் ளது.

இந்த போலி தடுப்பூசிகள் உலக பொது சுகாதாரத்துக்கு தீவிர இடர் பாட்டை ஏற்படுத்த வல்லன என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித் துள்ளது.

எனினும், இது குறித்து இந்திய அரசாங்கம் எந்தக் கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை.

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனகா தடுப்பூசி இந்தியாவில் கோவிஷீல்ட் என்ற பெயரில் உற்பத்தி செய்யப் படுகின்றது. அங்கு இந்த தடுப்பூசி தான் அதிகம் செலுத்தப்பட்டுள் ளது. 48.6 கோடி பேர் கோவி ஷீல்ட் டோஸ்களை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## இளம் உதைபந்தாட்ட வீரரும் விமானத்திலிருந்து விழுந்து பலி!

காபூல், ஒக. 21

ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற போது அந்நாட்டைச் சேர்ந்த இளம் உதைபந்தாட்ட வீரர் ஒருவரும், விமானத்தில் இருந்து விழுந்து உயிரிழந் தார்.

இதனை ஆப்கானிஸ்தான் தேசிய இளையோர் உதை பந்தாட்ட அணியின் சமூகவலைதளப் பக்கம் உறுதி செய்துள்ளது.

19 வயதான சாகி அன்வாரி, ஆப்கானிஸ்தான் தேசிய உதைபந்தாட்ட இளையோர் அணிக்காக விளையாடி யவர். ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தலிபான்கள் காபூலை கைப்பற்றிய பின்னர் அங்கிருந்து தப்பி ஏராளமானவர் கள் விமானங்களின் சக்கரங்கள், இறக்கைகளில் அமர்ந்து ஆபத்தமான முறையில் பயணம் செய்தனர்.

அவ்வாறு பயணம் செய்து உயிரிழந்தவர்களில் சாகி அன்வாரியும் ஒருவர் என்பது தெரியவந்துள்ளது.

அமெரிக்க இராணுவத்திற்குச் சொந்தமான போயிங் சி -17 விமானத்தில் சென்றபோது அவர் கீழே விழுந்து உயிரிழந்தார். (ஐ)

## இணைய திருடர்கள் கைவரிசை: ஜப்பானில் ரூ. 1950 கோடி திருட்டு

ரோக்கியோ, ஒக. 21

ஜப்பானின் முன்னணி எண்ணிம நாணயம் (Crypto currency) ஒன்று ஹேக்கர்களால் பாதிக்கப்பட்டுள் ளது. இந்த நாணய அலகு 10 கோடி டொலர்கள் - சுமார் 1,950 கோடி இலங்கை ரூபாய் திருடப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் நடந்த இரண்டாவது பெரிய திருட்டு சம்பவம் இதுவாகும். கடந்த வாரம் டிஜிற்றல் டோக்கன் தளமான பாலி நெட்வேர்க்கிலிருந்து 60 கோடி டொலர்கள் - கிட்டத்தட்ட 11,700 கோடி ரூபாய் திருடப்பட்டது.

இதேவேளை, லிக்கியூட்குளோபல் நிறுவனம் விடுத்த அறிக்கையில், நாங்கள் வருந்துகிறோம். சொத்துக்களை பாதுகாப்பான இன்னொரு முறைமைக்கு மாற்றுகி றோம்", என்று அறிவித்துள்ளது.

லிக்கியூட் எண்ணிம நாணயத்தின் நகர்வுகளை கண் டறிந்து அதனை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

லிக்கியூட் எண்ணிம நாணயம் 2014ஆம் ஆண்டு நிறு வப்பட்டது. இது 100இற்கும் மேற்பட்ட நாடுகளில் அனு மதிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)





## சிட்னி நகரம் முடக்கம்: செப். 30 வரை நீடிப்பு

சிட்னி, ஒக. 21

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலம் முழுவதும் கொரோனா வைரஸின் ஆபத்தான திரிபு பரவிவருகின்றது. இதனால், தொற்றை கட்டுப்படுத்த சிட்னி நகரம் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது. இந்த முடக்கம் எதிர்வரும் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரை நீடிக்கும் என்று சுகாதார அதிகாரிகள் நேற்று அறிவித்தனர்.

50 இலட்சம் பேர் வசிக்கும் சிட்டி நகரில் கடந்த ஜூன் மாதம் முதல் பொதுமுடக்கம் அமுலில் உள்ளது. எனினும், கடந்த வாரத்தில் சிட்னியில் தொற்று நோயாளர் தொகை இரட்டிப்பானது. நாளுக்கு நாள் தொற்று எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில் புதிதாக 644 பேருக்குத் தொற்று இருப்பது உறுதியானது. தொற்றுள்ளவர்களில் 41 பேர் தொற்றுடன் சமூகத்தில் நடமாடியுள்ளனர். நால்வர் இறந்தனர் எனவும் சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எனினும், இந்தப் பகுதிகளில் உடற்பயிற்சிக்காக தின சரி ஒரு மணி நேரம் மட்டுமே வெளியே செல்ல முடியும்.

இதேசமயம், விக்ரோறியா மாநிலயத்தில் 55 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 30 பேர் தொற்றுடன் சமூகத்தில் நடமாடி யுள்ளனர். அத்துடன், 6 பேருக்கு தொற்றியுள்ள வைர ஸின் வகை அறியப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

## 125 உலக பிரபல இடங்கள் ஊதா நிறத்தில் ஒளிர்ந்தன






லண்டன், ஒக. 21

உலகின் பிரபலம் வாய்ந்த 125 இடங்கள் ஊதா நிறத் தில் மின்னிய காட்சிகள் இணையத்தில் பரவி வருகின் றன.

ஒகஸ்ட் 24ஆம் திகதி ரோக்கியோவில் பராஒலிம்பிக் போட்டிகள் தொடங்கவுள்ளன. இந்த நிலையில், அமெ ரிக்காவின் நயாகரா நீர்வீழ்ச்சி, எம்பயர் ஸ்டேட் கட்ட டம், லண்டனில் உள்ள ரோம் கோலொசியம் உள் ளிட்ட உலகின் பிரபலம் வாய்ந்த 125 இடங்கள் ஊதா நிற வண்ண விளக்குகளால் ஒளிரவைக்கப்பட்டன.

பராஒலிம்பிக் போட்டியையொட்டி சர்வதேச மாற்றுத்திறனாளிகள் இணையம் என்கிற அமைப்பு ஒருங்கிணைத்த இந்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகள் அனைவரைப் போலவும் சமமாக நடத்தப்பட வேண் டும் என்பதை வலியுறுத்தி 30 நாடுகளில் உள்ள 125 இடங்கள் ஊதா நிற வண்ணங்கள் ஒளிர்ந்தன.

உலகின் மக்கள் தொகையில் 15 சதவீதத்தினர் மாற்றுத்திறனாளிகள் என்பதை குறிப்பிடும் வகையில் 'நாங்கள் 15' என்கிற கருப்பொருளின் கீழ் இந்த நிகழ் வில் எந்தவொரு வடிவத்திலும் மாற்றுத்திறனாளிகள் பேதத்துடன் நடத்தப்படக் கூடாது என வலியுறுத் தப் பட்டது. (ஐ)

### ஆப்கானில் தலிபான்கள் அதிகாரம்:

# 12 - 15 வயது சிறுமிகளையும் திருமணம் செய்ய வற்புறுத்து

காபூல், ஒக. 20

தலிபான்கள் 12 - 15 வயது சிறு மிகளை திருமணம் செய்யுமாறு வற்புறுத்துகின்றனர் என்று தகவல் கள் வெளியாகியுள்ளன.

இதனிடையே, பல்கலைக்கழகங் களில் இருந்து பெண்கள் தமது படிப்பை இடை நிறுத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. பெண்கள் பலரும் தங்கள் எதிர்கால வாழ்க்கை குறித்து அச்சம் தெரிவிக்கின்றனர் என்று பி.பி.ஸி. செய்தித் தளம் தெரி வித்தது.

இந்த நிலையில், பெண் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், 1996



- 2001 காலப்பகுதியில் என்ன நடந்தது என்று பலருக்கும் நினை வில் இருக்கிறது", என்று கூறினார்.

இந்த நிலையில், தொடர்ந்தும் நாட்டை விட்டு வெளியேற விமான நிலையத்தில் பலரும் கூடி யுள்ளனர். இதில், பெண்களே அதி கம் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இதேசமயம், ஆப்கானிஸ் தானின் நிறுவனங்களில் பணியாற் றிய பெண்கள் பலரையும் அந்த நிறுவனங்கள் பணியிலிருந்து நீக்கி யுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, சிறுமியர்கள் திருமணம் குறித்து தலிபான் செய் தித் தொடர்பாளர் சுஹைல் ஷா ஹீன் கூறுகையில், "சிறுபான்மை யினர், பெண்களின் உரிமைகளை ஆப்கான் விதிமுறைகள், இஸ்லா மிய மதிப்புகளின்படி மதிக்கும்", என்றார். (ஐ)



# சின்சினாட்டி ரென்னிஸ்: ஒசாகா அதிர்ச்சி தோல்வி!

சின்சினாட்டி, ஓக. 21

சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் முன்னிலை வீராங்கனையான ஜப்பானின் நயோமி ஒசாகா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

அமெரிக்காவின் பிரபலமான சின்சினாட்டி ரென்னிஸ் தொடர் சின்சினாட்டி நகரில் நடக்கிறது. இதில், நேற்று முன்தினம் நள்ளிரவு நடந்த போட்டியில் ஜப்பானின் நயோமி ஒசாகா, சுவிற்சர்லாந்தின் ஜில் ரெய்ச்மன் ஆகியோர் மோதினர்.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பை ஏற்படுத்திய போட்டியில் முதல் சுற்றை 6 - 3 என்ற செற் கணக்கில் வென்றார். ஆனால், இரண்டாவது, மூன்றாவது செற்களை 6 -3, 6-3 என்ற செற் கணக்கில் ஜில் வெற்றி கொண்டார். இதன் மூலம் காலிறுதி சுற்றுக்கு ஜில் முன்னேறினார். (ஐ)

# இருபது - 20 உலககிண்ணத்தில் ஆஸி. அணி சவால் அளிக்கும்!

வெலிங்டன், ஓக. 21

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியா எதிர் அணிகளுக்கு மிகவும் கடுமையான போராட்டத்தை கொடுக்கும்", என்று பிரண்டன் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

7ஆவது உலகக் கிண்ணத் தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் 17 - நவம்பர் 14 வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடக்கவுள்ளது.

இந்தநிலையில், நியூசிலாந்து அணியின் முன்னாள் வீரரான பிரண்டன் மக்கலம் கருத்துத் தெரிவிக்கையில்,

"அவுஸ்திரேலிய அணி புத்திக்கூர்மையானது. அவர்களின் பழைய போட்டிகளில் ஏற்பட்ட சறுக்கல்களை எல்லாம் மறந்துவிட்டு பார்த்தால் நிச்சயம் அது ஒரு கடினமான அணி. ஆகவே, இந்த இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் அந்த அணி நிச்சயம் சவாலாக இருக்கும்.", என்றார். (ஐ)




# பாகிஸ்தானுடனான தொடருக்காக இலங்கை வருகிறது ஆப்கான் அணி!

காபூல், ஓக. 21


பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடருக்காக ஆப்கானிஸ்தான் அணி இலங்கை வருகின்றது. இந்தத் தொடரில் பங்கேற்க தலிபான்கள் அந்த அணிக்கு அனுமதி அளித்துள்ளனர்.

அம்பாந்தோட்டையில், பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் அணிகள் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளன. இதற்காக இலங்கை வரும் அந்த அணிகள் 3 நாட்கள் தனிமைப்படுத்தப்படும்.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி செப். 3ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இரண்டாவது போட்டி 5 ஆம் திகதியும், மூன்றாவது போட்டி 8ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.




இதேவேளை, இந்தப் போட்டியில் பாகிஸ்தானின் முக்கிய வீரர்களாக பாபர் அஸாம், ரிஸ்வான், ஷகீன் அப்ரிடி ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்படவுள்ளது. இவர்கள் தொடர்ச்சியாக அதிக போட்டிகளில் விளையாடியுள்ளனர். இதனால், உயிர்குமிழியில் அதிக நாட்களை செலவழித்த இவர்கள் விரக்தி நிலையில் உள்ளனர். இதனாலேயே அவர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. (ஐ)



# விலகினார் ஹாலேப்!

சின்சினாட்டி, ஓக. 21

சின்சினாட்டி ரென்னிஸ் தொடரிலி ருந்து முன்னிலை வீராங்கனையான சிமோனா ஹாலேப் விலகினார்.

சின்சினாட்டி ரென்னிஸ் என்றழைக்கப்படும் மேற்கத் தேய தெற்கத்தேய ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடக்கிறது.

இதில், முன்னிலை வீராங்கனையான ருமேனியாவின் சிமோனா ஹாலேப் பங்கேற்றிருந்தார். நேற்று முன்தினம் காயம் காரணமாக அவர் போட்டியிலிருந்து விலகினார்.

இதனால், அவரை எதிர்த்து விளையாடவிருந்த அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா போட்டியின்றி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

இதேவேளை, நடப்பு சம்பியன் விக்ரேறியா அஸரென்கா (பெலாரஸ்), ஏஞ்சலிக் கெர்பர் (ஜெர்மனி), பாலா படோசா (ஸ்பெயின்), ஆன்ஸ் ஜாபர் (துனிசியா), கரோலினா பிளிஸ்கோவா (செக்குடியரசு), முகுருஜா (ஸ்பெயின்) ஆகியோர் வெற்றிபெற்று அடுத்த சுற்றுகளுக்கு முன்னேறியுள்ளனர். (ஐ)

# ரி - 20 உலகக்கிண்ணம்: ஆஸி. அணி அறிவிப்பு!

சிட்னி, ஓக. 21

இருபது - 20 உலகக்கிண்ணப் போட்டிக்கான 15 வீரர்கள் கொண்ட அணியை அவுஸ்திரேலிய கிரிக்கெட் அறிவித்தது.

உலகக்கிண்ண இருபது - 20 போட்டி தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் 17 தொடக்கம் நவம்பர் 14 வரை ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடக்கவுள்ளது.

இதற்கான அணிகளை ஒவ் வொரு நாடுகளும் அறிவித்து வரு கின்றன. இந்நிலையிலேயே அவுஸ் திரேலியா நேற்று அணியை அறிவித்தது.



அவுஸ்திரேலிய அணியில் விக்கெட் காப்பாளாராக மத்தியூ வேட் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக விக்கெட் காப்பாளராக ஜோஸ் இங்லிஸ் சேர்க்கப்பட்டுள்ளார். சர்வதேச கிரிக்கெட்டுக்கு இந்த தொடரிலேயே அவர் அறிமுகமாகிறார்.

அணித் தலைவராக அரோன் பின்ஞ் நீடிக்கிறார். காயத்தில் இருந்து மீண்ட ஸ்மித்தும் அணியில் இடம் பிடித்துள்ளார்.

அணி விவரம் :

அரோன் பின்ஞ் (அணித் தலைவர்), அஸ்ரன் அகர், பட் கம்மின்ஸ், ஜோஸ் ஹசல்வூட், ஜோஸ் இங்லிஸ், மிற்செல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், கேன் ரிச்சர்ட் ஸன், ஸ்டீவ் ஸ்மித், மிற்செல் ஸ்ரார்க், மார்கஸ் ஸ்ரொய்னிஸ், மிற்செல் ஸ்வீப்ஸன், மத்தியூ வேட், டேவிட் வோர்ணர், அடம்ஸம்ப்பா.

(ஐ)

# பல இடங்களில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு, ஓக. 21

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும், கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் பல இடங்களிலும் மழையுடனான வானிலை நிலவக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேநேரம், ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் 50 மில்லிமீற்றருக்கும் அதிகளவில் மழை வீழ்ச்சி பதிவாகும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

# கொழும்பு வைத்தியசாலை ஊழியர் கொரோனா தொற்றால் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 21

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஊழியர் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார்.

வைத்தியசாலையில் நோயாளர் விடுதி எழுதுநராகப் பணிபுரியும் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. உயிரிழந்தவர் மத்துகமவைச் சேர்ந்த 53 வயதான இரண்டு பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (இ)

# மரண அறிவித்தல்

மலர்வு 22 - 06 - 1958



உதிர்வு 18 - 08 - 2021

## சூரியகுமார் நமசிவாயம் (சூரி)

யாழ். அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, ஜேர்மனி, மலேசியா Kuala Lumpur, கனடா Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சூரியகுமார் நமசிவாயம் கடந்த (18.08.2021) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் மாணிக்கம் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், செல்லத்துரை – சரஸ்வதி (மலேசியா) தம்பதியரின் பாசமிகு மருமகனும், விஜயாவின் அன்புக் கணவரும், மீரா, வினோத்குமார், அஸ்வின்குமார், மித்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரோஜினிதேவி (சறோ), காலஞ்சென்ற சாரதாதேவி(சாரதா), சரஸ்வதிதேவி(ராணி), சகுந்தலாதேவி(சிறி), சற்குணதேவி(பேபி), சாந்தினிதேவி(சாந்தி), சந்தானதேவி(செல்லம்), காலஞ்சென்றவர்களான சந்திரகுமார், சிவப்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,ரமேஸ், செல்லத்துரை(மலேசியா), சரவணபவான், திருநாவுக்கரசு, ராஜா, சுந்தரநாதன், வசந்தகுமார், சாந்தகுமார், காலஞ்சென்ற சுபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 21 Aug 2021 6:00 PM - 9:00 PM
Sunday,22 Aug 2021 8:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave>
Markham, ON L3R 5G1, Canada.

கிரியை
Sunday, 22 Aug 2021 8:30 AM - 10:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave,
Markham,ON L3R 5G1, Canada.

தகனம்
Sunday, 22 Aug 2021 10:00 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
வினோத்குமார் (மகன்) - +16477804120
விஜயா (மனைவி) - +16479012873
தனராஜ் (சகோதரன்) - + 14167268569

தகவல்:
குடும்பத்தினர்.

# நாட்டுக்கு வருமானம் ஈட்டித்தந்த அனைத்து வழிகளும் முடக்கம்!

## மதுர விதானகே எம்.பி. கவலை

கொழும்பு, ஓக. 21

**கொரோனா வைரஸ் தொற்றால் நமது நாட்டுக்கு வருமானத்தை ஈட்டித் தந்த அனைத்து வழிகளும் மூடப்பட்டுள்ளன என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்தார்.**

**கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, நமது நாடு மட்டுமன்றி உலக நாடுகள் அனைத்துமே பாரிய பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றன.

இந்தத் தொற்றுப் பரவல் காரணமாக மக்களின் சுகாதார நிலை, வாழ்வாதார மட்டுமன்றி உலக பொருளாதாரத்துக்கும் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும், நமது ஜனாதிபதி தலைமையிலான அரசுக்கு மக்களைப் பாதுகாப்பதற்கான பெரும் பொறுப்பு உள்ளது.

விசேடமாக எதிர்க்கட்சி கடந்த ஆட்சியின்போது சொர்க்கம் போன்ற ஒரு நாட்டை எம்மிடம் கையளித்ததைப் போன்றே செயற்படுகின்றது.

ஏனெனில், 2014 ஆம் ஆண்டு டொலரின் இலங்கை பெறுமதி 130 ஆகக் காணப்பட்டது. எனினும், நாம் நாட்டைப் பொறுப்பேற்கும்போது 199 முதல் 200 ரூபாயாகக் காணப்பட்டது.

உலகளாவிய தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அந்த டொலர் பெறுமதியை அவ்வாறே அரசு பேணி வருகின்றது.

எனினும், ஐந்து வருடங்களில் நாட்டின் பொருளாதாரம் அதேபோன்று நாட்டின் பாதுகாப்பைச் சீர்குலைத்துடன் அபிவிருத்தியடைந்த நாட்டை எமக்குக் கையளித்ததைப் போன்று இன்று வீதியில் இறங்கி பேரணி செல்கின்றனர்.

இது தொடர்பில் நான் எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று எதிர்க்கட்சியினர் தொடர்பில் நாட்டு மக்களும் நன்கறிவர்.

இன்று வரை நாட்டுக்கு வருமானத்தைத் தேடித்தந்த சகல வழிகளும் மூடப்பட்டுள்ளன.

விசேடமாக சுற்றுலாத்துறையை எடுத்துக்கொண்டால் பூஜ்ஜியத்துக்கு விழுந்துள்ளது. அதேபோன்று வெளிநாட்டு வேலைவாய்ப்புகளால் எமது நாட்டுக்குப் பாரிய வருமானம் கிடைத்தது. எனினும், அந்த வருமானமும் மறைப்பெறுமதிக்குச் சென்றுள்ளது.

ஆடைத்தொழிற்றுறை, உற்பத்தித்துறை, போக்குவரத்துத்துறை, பண்டப் போக்குவரத்து என்பவற்றை எடுத்துக்கொண்டால் அனைத்துத் துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன.




தொழிற்சாலைகளை நடத்திச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில், இரசாயனத் திரவியங்களைப் பெறுக்கொள்வதில் சிக்கல் காணப்படுகின்றது. எமது பொருட்களை விற்பதிலும் சிக்கல் காணப்படுகின்றது.

எனவே, இவ்வாறான பாரிய போராட்டங்களுக்கு மத்தியில் எமது ஜனாதிபதி தலைமையிலான அரசு நாட்டு மக்களின் பாதுகாப்பையும் அதேபோன்று பொருளாதாரத்தையும் நிர்வகித்து பாரிய எதிர்பார்ப்பைப் பெற்றுள்ளது" - என்றார். (இ)

# சுகாதார விதியை மீறி நடத்திய திருமண நிகழ்வு இடைநிறுத்தம்

நுவரெலியா, ஓக. 21

நுவரெலியா மாவட்டம், பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரியபுர பகுதியில் சுகாதார விதிகளை மீறி நடைபெற்ற திருமண நிகழ்வு ஒன்று இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது எனக் பொகவந்தலாவைச் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

நாட்டில் தீவிரமடைந்து வரும் கொரோனா மற்றும் டெல்டா தொற்றுக் காரணமாக, திருமண நிகழ்வு மற்றும் பொது நிகழ்வுகளுக்கு அரசு தடைவிதித்துள்ள நிலையில், சுகாதார விதிகளை மீறி இந்தத் திருமண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது எனவும், இதில் சுமார் 25 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர் எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிக்குக் கிடைத்த தகவலுக்கமைய, குறித்த திருமண மண்டபத்துக்கு விரைந்த பொதுச் சுகாதார அதிகாரிகள் மற்றும் பொகவந்தலாவை பொலிஸார், அங்கு கூடியிருந்தவர்களை எச்சரித்து வெளியேற்றியுள்ளனர்.

அத்துடன், மணமகன், மணமகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுடன் மாத்திரம் திருமணத்தை நடத்துமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

குறித்த திருமண மண்டபத்தின் உரிமையாளரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (இ)



## நாட்டை...

கொண்டு, திட்டமிட்ட முறையில் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும். அதனால், ஒரு குழுவாக, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தோற்கடிப்பதற்கு ஒன்றிணைந்து பணியாற்ற முன்வர வேண்டும்", என்று கேட்டுள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அவர் நேற்று நாட்டு மக்களுக்கு விஷேட உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவரின் உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு;

"கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரே வழி தடுப்பூசி ஏற்றுவதேயாகும் என்று, உலக சுகாதார ஸ்தாபனம், மருத்துவ நிபுணர்கள் மற்றும் உலக தரம்வாய்ந்த வேலைத்திட்டம் ஊடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனால்தான், இலங்கைக்குத் தடுப்பூசிகளை கொண்டுவருவதற்காக, கடந்த காலங்களில் நான் விசேட ஆர்வம் காட்டியிருந்தேன். உலக நாடுகளின் விசேடமாக சீனா, இந்தியா நாடுகளின் தலைவர்களுடன் இது தொடர்பாக எமது நாட்டைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி ஏற்ற வேண்டுமென்ற தேவையின் காரணமாகவே அனைத்து முயற்சிகளையும் எடுத்தேன். இந்த முயற்சிகளின் பலனாகவே, தற்போது ஒவ்வொரு மாதமும், எமக்குத் தேவையான தடுப்பூசிகள், பெருமளவில் கிடைத்துக்கொண்டு இருக்கின்றன.

**செப். 10இற்குள் 100 வீத தடுப்பூசி**

"தடுப்பூசி ஏற்றும் நாடுகளில் நாம் உயர்ந்த இடத்தில் இருக்கிறோம். ஒரு கோடியே 20 இலட்சத்து 19 ஆயிரத்து 193 பேருக்கு முதல் அலகு தடுப்பூசிகளை வழங்கியுள்ளோம். 51 இலட்சத்து 24 ஆயிரத்து 185 பேருக்கு இரண்டாம் அலகு தடுப்பூசிகளை வழங்கியுள்ளோம். இரண்டாம் அலகு தடுப்பூசிகள் 30 இலட்சம் தடுப்பூசிகளை கையிருப்பில் உள்ளன. மேலும், 30 இலட்சம் தடுப்பூசிகள் இந்த மாத இறுதியில் கிடைக்கவுள்ளன.

"இதுவரையில், 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 98 வீதமானோருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதோடு, அவர்களில் 43 சதவீதமானோருக்கு இரண்டாம் அலகுத் தடுப்பூசியும் ஏற்றப்பட்டுள்ளது. ஒகஸ்ட் 31ஆம் திகதிக்குள், 81 சதவீதத்துக்கும் மேற்பட்டோருக்கு, இரண்டாம் அலகுத் தடுப்பூசியை வழங்குவதற்கான இயலுமையும் உள்ளது. செப்ரெம்பர் 10ஆம் திகதிக்குள், 100 சதவீதமானோருக்கு இரண்டாம் அலகுத் தடுப்பூசியை வழங்க முடியும். இந்த நிலைமையுடன், தொற்றுக்குள்ளாகும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதனால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் குறைவடையும்.

"இதுவரை காலமும் தமது உயிர்களைப் பணயம் வைத்துச் செயற்பட்டு வரும் மருத்துவர்கள் , தாதியர்கள் உள்ளிட்ட அனைத்து சுகாதார சேவை ஊழியர்களின் சேவையை, நான் மனதாரப் பாராட்டுகின்றேன். அத்துடன், தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த சுகாதார துறையின் அனைத்துத் தரநிலை அதிகாரிகளுக்கும், நான் எனது மரியாதையைச் செலுத்துகின்றேன்.

**போராட்ட காலமல்ல**

"இது, வேலைநிறுத்தம், போராட்டங்களுக்கான காலம் அல்லவென்பது தெளிவாகிறது. நாட்டை அராஜக நிலைமைக்குக் கொண்டுவரத் தயாராகாதீர்கள். மாற்றுக் கருத்தாளர்கள், தொழிற்சங்கங்கள், மருத்துவர்கள், ஏனைய சுகாதார ஊழியர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இடம்பெறும் போட்டியோ மோதலோ அல்ல. நாம் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த முழு உலகமும் எதிர்கொண்டுள்ள தீவிரமான பிரச்னையாகும். இன்று ஒவ்வொரு நாடும், புதிய பொதுமைப்படுத்தல் முறைமையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றன. அரசாங்கம் என்ற ரீதியில் நாம் எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் சரியாக எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**வாராந்தம் அன்ரிஜென்**

"கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களில் அதிகமானோர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இவர்களில் அனேகர் நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டோர். எனவே, இவ்வாறான வாரத்துக்கு ஒரு முறையேனும் அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதார துறையினருக்கு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

"நாட்டை மீண்டும் முடக்கினால் இந்த நாடு பெரும் பொருளாதார பிரச்னைக்கு முகம் கொடுக்கும். அதை இந்த நாடு பொறுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லை. சிறிய பொருளாதாரத்தைக் கொண்டிருக்கும் எமது நாடும், இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதை விடுத்து, மீண்டும் இந்த நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாகச் சரிவடையச் செய்யும் நிலைமைக்குச் செல்ல முடியாது." - என்றார். (ஐ)

## நேற்றிரவு முதல்...

எனினும், அனைத்துவிதமாக அத்தியாவசிய சேவைகள், மருந்து தயாரிப்பு, விநியோகம், விவசாயம் ஆடைக் கைத்தொழில் துறைகளை என்பன எந்த இடையூறுமின்றி முன்னெடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

இதனைத்தவிர, 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளுக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கான வேலைத்திட்டம் சுகாதாரத் துறையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி இதன்போது தெரிவித்துள்ளார். (ஐ)

## மூன்று வகையான...

டன் தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.

ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழக தொற்று நோய் பிரிவினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 60 வயதுக்கு...

இந்தத் தடுப்பூசித் திட்டத்தை, இராணுவத் தளபதியின் மேற்பார்வையின் கீழ், சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல்படி மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் கோவிட் ஒழிப்பு விசேட குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலத்தில், விவசாயம், ஆடை மற்றும் நிர்மாணத் தொழில்கள், ஏற்றுமதித் தொழில்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட அத்தியாவசியச் சேவைகள், விமான நிலையங்கள் மற்றும் விமான நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகப் பேணவும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறுபவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டத்தை அமுல்படுத்துமாறும், ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை வழங்கினார். இக்காலப் பகுதியில், சுதேச மருந்துகளை கிராமிய மற்றும் நகர மட்டத்தில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, கெஹெலிய ரம்புக்வெல்ல, காமினி லொகுகே, டலஸ் அழகப்பெரும, பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர்களான சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, சிசிர ஜயகொடி, சன்ன ஜயசுமன, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் விசேட வைத்திய நிபுணர் சஞ்சீவ முனசிங்க, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, இராணுவ மற்றும் கடற்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# மரண தொகையை குறைப்பதே இலக்கு

## இராணுவத் தளபதி கூறுகின்றார்



கொழும்பு, ஒக. 21

"நாட்டில் கொரோனா மரண எண்ணிக்கையை வரையறுப்பதே எங்களின் பிரதான இலக்கு."

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 43 சதவீதமானவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள் காணப்பட்டாலும் சிலர் அதற்கு வருவதற்கு விரும்பாத காரணத்தால் நடமாடும் தடுப்பூசி நிலையங்கள் அமைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

எந்தவொரு கொரோனாத் தடுப்பூசியையும் போட்டுக்கொண்டு இலங்கையிலிருந்து எந்தவொரு நாட்டுக்கும் செல்ல முடியும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

எனினும், ஒருசில நாடுகள் அறிவிக்கின்ற தடுப்பூசியைப் போட்டுக் கொண்டு சென்றால் தனிமைப்படுத்தப்படாமல் நேரடியாக அந்த நாடுகளுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

## பொருட்கள் கொள்வனவு செய்ய...

நிரவு 10 மணி முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நடைமுறைக்கு வந்தது. இந்தத் தகவல் நேற்று பிற்பகல் பொருட்களை கொள்வனவு செய்ய மக்கள் முண்டியடித்ததால் நகரப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல்களும் ஏற்பட்டன.



வேளை வெளியானதைத் தொடர்ந்து மக்கள் பொருட்களை கொள்வனவு செய்தனர்.

உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், மற்றும் அவசிய தேவைப் பொருட்கள்...

இதேசமயம், யாழ்ப்பாணத்தில், பெரும்பாலான வர்த்தகர்கள் பொறுப்புணர்வுடன் மக்களை வரிசைப்படுத்தி சமூக இடைவெளி பேணி குறைந்தளவானோரே சிறப்பு அங்காடிக்குள் அனுமதித்தமையையும் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையத்திலும், மதுபான நிலையங்களிலும் மக்கள் நீண்ட வரிசைகளில் நின்றிருந்தனர். (ஐ)

## வடக்கில் 114...

இதன்படி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 57 பேரும், உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேரும், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் இருவரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவரும், காரைநகர் மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் என்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 64 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் 16 பேருக்கும், பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனையில் 4 பேருக்கும், நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் இருவருக்கும், வவுனியா பொது மருத்துவமனையில் ஒருவருக்குமென 23 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னார் பொது மருத்துவமனையில் 16 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையில் 5 பேருக்கும், பொது மருத்துவமனையில் ஒருவருக்கும் என்று 6 பேருக்கும், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் இருவருக்கும் தொற்று அடையாளம் காணப்பட்டது. (ஐ)

## மேலும் 3,835...

அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2,096 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர். அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 320,810 ஆக அதிகரித்துள்ளது.

## மேலும் 195...

அறிக்கையில் இது தொடர்பான விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, நாட்டில் பதிவான மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 6,985ஆக அதிகரித்துள்ளது.

நேற்று உயிரிழந்தவர்களில் 98 ஆண்களும் 97 பெண்களும் உள்ளடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu





# வேண்டுவோர்க்கு வேண்டும் வரமருளும் அன்னதான கந்தன்

இலங்கை திருநாட்டின் வடபகுதியில் தொண்டைமானாற்றங் கரையில் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் அமைந்துள்ளது. இது மிகப் பெரும் வரலாற்றை தன்னகத்தே கொண்டது. வீரபாகு தேவர் சூரபத்மனிடம் தூது சென்ற போது தனது காலடியைக் கல்லோடை என்ற இடத்தில் பதித்துச் சென்றார். பின்பு திரும்பும் வேளை சந்திகால பூசை செய்ய வேண்டி இருந்ததால் வல்லி ஆற்றங்கரையில் பூவரச மர நிழலில் வேல் ஒன்றை வைத்துச் சந்தி காலப் பூசை செய்து வழிபாட்டை மேற்கொண்டார். இதனை தொடர்ந்து அந்த இடத்தில் சித்தர்களும் யோகிகளும் முனிவர்களும் தவம் செய்து முக்தி அடைந்தனர் எனக் கருதப்படுகிறது.

தேவலோக கந்தர்வனான ஐராவசு வியாழ பகவானுடைய சாபத்தால் யானையாக கதிர்காமக் காட்டில் மதம் கொண்டு அலைந்து திரிந்தான். கதிர்காம கந்தனை வேண்டி தவம் செய்து கொண்டிருந்த சிகண்டிமுனிவரை இந்த யானை தாக்க வந்தபோது சிகண்டி முனிவர் தனது கையிலிருந்த வெற்றிலையை கிள்ளி கதிர்காம கந்தனை நினைத்து யானை மீது வீசினார்.

அந்த வெற்றிலையின் நுனி வேலாக மாறி யானையை தாக்க அந்த யானை துடிதுடித்து வீழ்ந்தது. கந்தர்வனாக உருவெடுத்து தனக்கு முக்தி தர வேண்டுமென வேண்டி நிற்க சிகண்டிமுனிவரும் நீ வடபால் சென்று வல்லி ஆற்றங்கரையில் உள்ள கல்லோடை பகுதியில் தவம் செய்து முத்தியடைவாயாக என பணித்தார்.

ஐராவசுவும் சிகண்டி முனிவர் கூறுயவாறு வல்லி ஆற்றங்கரையில் உள்ள கல்லோடை பகுதியில் பூவரச மர நிழலில் தவம் செய்து சமாதியானார். இந்த இடத்தில் அமைக்கப்பட்ட இந்த கோயில் பல நூறு வருடங்களாகப் புகழ்பெற்ற வணக்கஸ்தலமாக இருந்து வருகிறது. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயராலும் பின்பு ஒல்லாந் தராலும் அழிக்கப்பட்ட இவ்வாலயம் ஒல்லாந்தர் காலப் பிற்பகுதியில் மருதர், கதிர்காமர் என்ற முருக பக்தரால் மீண்டும் அமைக்கப்பட்டது. முருகப்பெருமான் ஆற்றங்கரையில் ஆடு மேய்க்கும் சிறுவனாக காட்சி கொடுத்து நான் அறுபத்து மூவருடன் இங்கு வந்து எழுந்தருளியுள்ளேன். எனக்கு இந்த இடத்தில் ஆலயம் அமைத்து அறுபத்தைந்து ஆலம் இலைகளில் அமுது படைத்து என்னை வழிபட்டு வருபவர்களுக்கு அவ் அமுதை வழங்குவீராக! எனக் கூறினார்.

இதைக்கேட்டு ஆச்சரியமடைந்த கதிர்காமர் எனக்கு மந்திரமோ பூசைகளோ தெரியாது. நான் எவ்வாறு தங்களுக்கு பூசை செய்வேன்? என்று கூற அவரை கணப்பொழுதில் கதிர்காமம் அழைத்து சென்று அங்கு நடைபெறும் பூசை முறைகளைக் காட்டி, வாய் கட்டிப் பூசை செய்யுமாறு கூறி வேல் ஒன்றையும் வழங்கினார் என ஆலய புராணம் கூறுகிறது.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் தல விருட்சமாக பூவரச மரம் அமைந்துள்ளது. இன்று இந்த ஆலயம் அமைந்துள்ள இடத்தில் இருந்த ஒரு பூவரச மர நிழலிலேயே வீரபாகு தேவர் வேல் ஒன்றை வைத்து சந்திக்கால பூசை செய்தார். முருக பெருமானும் கதிர்காமருக்கு முதலில் காட்சி கொடுத்தது. பூவரச மர நிழலிலேயே என கொள்ளப்படுகிறது.

அன்னதான கந்தன் என்று அன்பாக அழைக்கப்படும் முருகப்பெருமானுக்கு ஆவணி மாதத்தில் வரும் பூரணையில் தீர்த்தம் நடைபெறும். அதற்கு முன்வரும் அமாவாசை அற்றுப்போகும் தினத்தில் கோயில் கிணற்றுக்கு அருகே வள்ளிக் கொடி முளைப்பதோடு கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகின்றது. செல்வச்சந்நிதியின் முருகப் பெருமான் மூலஸ்தானத்தில் வேல் உருவிலேயே எழுந்தருளி அருள் பாலிக்கிறார்.

திருவிழாக் காலத்தில் வேலவன் வேல் உருவிலேயே வீதிவலம் வருகிறார். இந்த வேலில் சிகண்டி முனிவன் தன்னைத் தாக்க வந்த யானைக்கு வெற்றியை கிள்ளி வீசியபோது அது வேலாக மாறி யானையை தாக்கியதை எடுத்துக்காட்டும் முகமாக வெற்றிலையின் நுனி பதிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

செல்வச் சந்நிதி ஆலயம் கல்லோடை என்ற பகுதியில் அமைந்திருப்பதால் கல்லோடை கந்தன் எனவும், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் காவடி எடுத்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதால் காவடிக் கந்தன் எனவும் ஆற்றங்கரையில் எழுந்தருளி அருள் பாலிப்பதால் ஆற்றங்கரையான் எனவும் சந்நிதிமுருகன் அழைக்கப்படுகிறார்.

இத்தகு அருள் சிறப்புகளுடன் விளங்கும் அன்னதானக் கந்தனுக்கு கடந்த 08.08.2021 ஞாயிற்றுக் கிழமை கொடியேற்ற திருவிழா இடம்பெற்று இன்று சனிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

எல்லோரும் இந்த உலகில் நல்லவண்ணம் வாழ பெருமான் அருள்பாலிக்க வேண்டும்.




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-
யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
யாழ்ப்பாணம் வலயக்கல்வி



7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- காதல் மன்னன்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை

**இரவு**
7.00 மணி : சுப்பர் குறுாப் - இசை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்-அறத்தின்
அறச்செயற்பாட்டுக்கு கரம் கொடுப்போம்



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமரலை)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
07.00 மணி : அன்ரியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு